265

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-கO.] விரோதிகிருதுஹு பங்குனிமீ [பகுதி-ரு

உள்ளுறை.

வடமொழியும் தமிழும்:—பத்திராதிபர்.	உஉக
நாலடியா ராராய்ச்சி:-ஸ்ரீமத்-டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரிகள்	உஉஅ
வானசாஸ்திரம்:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர்.	உ௩எ
தீப்பாய்தல்:—ஸ்ரீமத்-ச. பூபாலபிள்ளை.	உசரு
அச்சிட்ட காழியந்தாதி:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர்.	உருO
நுண்பொருண்மாலை:—பத்திராதிபர்.	உருசு
இருவகையுடம்பு:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை.	உருஅ
வெண்பா:—Professor Julien Vinson.	உசுO
திருமந்திர நூறுபாட்டுக் குரை:—ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்.	௯
அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:—ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவர்.	கசுக
வாழ்த்துப்பாக்கள்:—ஸ்ரீமத்-வே. முத்துசாமி ஐயர்.	
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்குமுதலியன:—	

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

266

Hair Troubles Avoided

By continually using such a preparation as

KUNTAL-KAUMADI

THE NATIONAL HAIR OIL.

You keep the scalp moist and cool. The roots of the Hair are supplied with energy and nourishment and the hair maintained in the best possible condition.

PRICE
12 AS.
PER BOTTLE.

Price per Big Phial As. 12 only. Per V.P.P. Rs. 1-3.
" " 3 Rs. 2. only. " " Rs. 2-11.

TRY IT TO-DAY.

Sole Agents to Madras Presidency,

M. Shaw Heerdayal & Co.,
144-5. China Bazaar Road,
Madras.

KAVRAJ R. C. SEN L. M. S.
216, Cornwallis Street, Calcutta.

267

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-கo.] விரோதிகிருது௵ பங்குனிமீ [பகுதி-ரு

வடமொழியும் தமிழும்.

(கஅo-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

(31) தமிழிற் சூரியனுதிக்குந் திசையைக் கிழக்கெனவும் அதனெதிரிய திசையை மேற்கெனவும் வழங்குவதுபோல வடமொழியிலும் முறையே அவற்றைப் பூர்வம், பச்சிமம் என வழங்குகின்றனர். கிழக்கு, மேற்கு என்பன கீழ், மேல் என்பனவாம். பூர்வம், பச்சிமம் என்பன முன், பின் என்பனவாம். ஆகவே கீழ்-முன்; என்பனவும், மேல்-பின்; என்பனவும் காலம்பற்றிய ஒருபொருட் சொற்களாதலாற் பூர்வம் - கிழக்கு. பச்சிமம் - மேற்கு. என்பன பொருள்பற்றி யொற்றுமைப்பட்டிருக்கின்றன. சூரியன் முற்பகலிலும் பிற்பகலிலும் நிற்பதுபற்றி அத்திசைகட்கிருமொழியிலு மிப்பெயர்களிடப்பெற்றனபோலும். இவ்வாறே ஸஹோதர:- உடன்வயிறு. திர்யக்- விலங்கு. என்றற் றொடக்கத்தனவும் ஒருபொருளுணர்த்துமாறு கண்டுகொள்க.

(32) தமிழில் அருட்குறிப்புள்ள கண்ணைக் கடைக்கண் என்றும், அந்நோக்கினைக் கடைக்கணோக்கமென்றும் வழங்குவர். வடமொழியில் முறையே அவற்றைக் கடாக்ஷமென்றும் கடாக்ஷவீக்ஷணமென்றும் வழங்குவர். இதனடியாகக் கடைக்கணி, கடாக்ஷி என வினைப்பகுதிகளும் பிறக்கும். இவற்றுள் முதலிரண்டெழுத்தாகிய கடை, கடா வென்பன ஒரு மொழியாகவும், கண், அக்ஷம் என்பன

*

மொழிபெயர்ப்பாகவுங் காணப்படுகின்றன. ஈண்டுக் கடா கடையா யிற்றோ கடை கடாவாயிற்றோ வென்பது ஆராயத்தக்கது.

(33) இவ்வாறே விகுதிகளிலும் சில ஒற்றுமையுள்ளனவாகக் காணப்படுகின்றன. அவை வருமாறு:—வடமொழியிற் சில தத்தி தாந்தமொழிகள் ஸ்ரீமான், பசுமான்; தநவான் என வழங்குவதுபோ லத் தமிழிலும் மலையமான், சேரமான், தொண்டைமான், கல்விமான்; செல்வவான் என வழங்குகின்றனர்.

(34) தமிழிற் காராளன், வேளாளன், கரையாளன், கம்மாளன் தாளாளன் என ஆளன் என்னும் விகுதி வழங்கப்படுவதுபோல வட மொழியிலும் குலா(ள)ல:,சண்டாள:,ஜம்வா(ஐ)லஃ என அவ்விகுதி வழங்கப்படுகிறது. லகார ளகாரங்களுக்கு வேறுபாடில்லை யென்பது வடநூற்றுணிபு.

(35) வடமொழியிற் செயப்படுபொருள்பற்றி இந்திரனாற் செய்யப்பட்டது ஐந்திரம்; குமாரனாற் செய்யப்பட்டது கௌமாரம்; எனத் தத்திதாந்தம் பெற்று வழங்குவது போலத் தமிழிலும் தொல் காப்பியனாற் செய்யப்பட்டது தொல்காப்பியம்; கல்லாடனாற் செய் யப்பட்டது கல்லாடம்; எனத் தத்திதாந்தம் பெற்று வழங்கப்பட்டுள் ளன. வடமொழியிற் றத்திதாந்தபதங்களில் ஆதிவிருத்தி வருவது போலத் தமிழிலும் வடக்கினின்றுவரும் காற்று - வாடை. என ஆதி விருத்தி வந்திருக்கின்றது. இன்னும் இவ்வாறு காட்டத்தகுவன பலவுள; அவற்றையெல்லாம் உற்றுநோக்கின் வடமொழியும் தமிழும் தொன்றுதொட்டே நகமுந்தசையும்போலியைபுபெற்றிருப் பனவாகவே காணப்படும்.

(36) தமிழில் இக் காலத்துள்ள இலக்கணநூல்களிலெல்லாம் மிகப் பழமையானது தொல்காப்பியமொன்றே. அத் தொல்காப்பியச் சூத்திரங்களினிடையிடையே "என்ப" "என்றிசினோர்" என இலக் கணவிதிகளை முன்னோர்கூற்றாகவைத்துக் கூறுதலாற் றொல்காப்பியத் துக்கு முன்னும் பல இலக்கணநூல்கள் இருந்தனவாக விளங்குகின் றன. அவை யிக்காலத்திறந்தன. அவ்வாறே வடமொழி வியாகர ணத்தும் ஆசார்யாணாம், [illegible], [illegible]

264

[illegible]ஸ்ய, ஐந்த்ரவ்யாகரணஸ்ய, என முன்னோர்கள் கொள்கைபற்றிக் கூறியிருத்தலால் வடமொழியின் கண்ணும் பலராற் செய்யப்பட்ட பல வியாகரண நூல்களிருந்தனவாக விளங்குகின்றன. அவையு மிக் காலத்திறந்தனபோலும்.

(37) வடமொழிக்கு இலக்கணநூலார் எல்லைகூறுமையால் அது உலகமுழுதும் பண்டுதொட்டுப் பயிலப்பெற்று வந்ததென்பது விளங்குகின்றது. அன்றியும் (ஸிந்து) சிந்து எனத் தென்கடலுக்கும், (ஸிம்ஹளம்) சிம்மளம் எனச் சிங்களநாட்டிற்கும், (ஸேது) சேது, (தநுஷ்கோடி) தனுக்கோடி, (கந்யாகுமாரி) கந்யாகுமாரி எனத் தமிழ்நாட்டுத்தீர்த்தத்துறைகளுக்கும், கவாடபுரம் எனப் பாண்டியராஜதானிநகரத்திற்கும், சங்கம் எனத் தமிழாராய்ந்த முக்கழகத்திற்கும், மகேந்திரம், கந்தமாதனம், ஸஹ்யம், விந்த்யம் எனத் தென்னாட்டுமலைகளுக்கும், லங்கை, சித்தபுரம், யாமகோடி, ரோமகபட்டணம் என மத்தியபூமியைச் சுற்றியுள்ள நான்கு பிரதான நகரங்களுக்கும் பெயர்வழங்குதலாலும் நன்கு விளங்கும். மற்றும் சீதையைத்தேடிச் செல்லும் வானரவீரரைச் சுக்கிரீவன்நோக்கி ராக்ஷஸர்கள் ஸம்ஸ்க்ருதமும் பேசவல்லவர்கள் எனக் கூறியதாகச்சொல்லும் வான்மீகமும் இங்கு நோக்கத்தக்கது.

(38) இவ்வாறாக வடமொழி யுலகமெங்கும் பரவியிருந்தமையே ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு பாஷையிலுமுள்ள அரிய விஷயங்களை யெல்லாம் ஒருங்குசேரத் தன்னகத்துக்கொண்டு சிறந்து விளங்குவதற்கேதுவாயிற்று. தேவ பாஷையாயுள்ள வடமொழிக்கு இவ்வாறு சிறப்புச் சொல்லுதல் பொருந்தாதென்று சிலர் நினைக்கக்கூடும். இக்காலத்து மேதாவிகளிற் பெரும்பாலார்க்குத் தெய்விகச் சிறப்புச்சொல்வது சிரிப்புக்கிடமாயிருப்பதால் அவர்களுக்குமிணங்குமாறு தெய்விகத்தை யொருபுற மொதுக்கிவைத்துக் கொள்வதே பொருத்தமுடையதாம். அன்றியும் பைசாச பாஷையிலிருந்து பிரகத்கதை யென்னும்நூல் வடமொழியில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்குமாயின் மற்றைய பாஷைகளிலுமிருந்து விஷயங்களைக் கொண்டிருக்குமென்பது குற்றமாகமாட்டாது. எந்தப்பாஷை

யுலகமெங்கும் பரவிப் பலபாஷை நூலுணர்வினையும் தன்னகத்துக் கொண்டு விளங்குகின்றதோ அதுவே யுலகத்தாரால் நன்குமதிக்கப் படுகிறது. இப்பொழுது வளர்ச்சியடைந்துவருகிற பாஷைகளிலிந்த லக்ஷணம் காணப்படுகிறது. ஆதலாற் சிலரபிப்பிராயப்படி பண்டைக்காலத்திற் றமிழிலிருந்து சில விஷயங்கள் வடமொழிக்கட் சென்றிருப்பதாக வைத்துக்கொண்டாலும் வடமொழிக்கு அதனு லொருகுறைவுண்டாகமாட்டாது.

(39) தமிழ்மொழிக்கு இலக்கணநூல்களில் "வடவேங்கடந் தென்குமரி" என ஆசிரியர் எல்லைகூறிவிட்டபடியால் அவரதுஆணை கடந்து அப்புறம் செல்லலாகாதென்று இற்படிகடவாக் கற்புடை மடந்தைபோல அவ்வெல்லைக்குட் பல்லாயிரவருடங்களாக அடங்கி யொடுங்கிக் கிடப்பதும் ஆராயத்தக்கதே.

(40) பாணினீய வியாகரணம் ஸ்ஂஜ்ஞா - பரிபாஷை, அதி காரம் முதலிய விதானங்களாலும், தந்த்ரோக்திகளாலும், நியாயங்களாலும் மிகச்சுருங்கிய சொற்களால் விரிந்தபொருள்களை யுணர்த்து மாற்றலுடைய வாக்கியரூபமாகிய சூத்திரங்களா லமைக்கப்பெற்றிருக்கிறது. அன்றியும் அவை "மாத்திரலாபம் புத்திரலாபம்" எனக் கருதிய சூத்திரங்களெனவுங் கூறுவர். அதாவது பாணினி சூத்திரங்களிற் சொல்லக்கருதிய பொருளை அச்சூத்திரத்தின் எழுத்துக்களின் அளவில் ஒரு மாத்திரையளவு குறையுமாறு பிறிதொரு சூத்திரம் சுருக்கிச்சொல்ல வியலுமாயின் அது ஒரு புத்திரப்பேறுபோலக் கொள்ளல்வேண்டும் என்பதாம்.

(41) தொல்காப்பியச்சூத்திரங்கள் அங்ஙனமன்றிச் செவ்விய தமிழ்ச்சொற்களாற் கருதியபொரு ளினிதுவிளங்குமாறு செய்யு ளோசைபெற்ற அடிகளால் ஆக்கப்பட்டிருக்கின்றன.

(42) பாணினீய வியாகரணத்தைப் பின்புள்ளோர் மிக நன்கு மதித்து அந்நூலையே பிரதாநநூலாகக் கொள்ளுமாறு, பின்னூல்செய்யப் புகுந்தோர் பிறிதாக வெறுநூல் செய்யாது ஓரொருவரொவ்வோ ரிலக்கணத்தை யாராய்ந்து அதற்கே உரைச்சூத்திரங்கள்போல வார்த்திகங்களைச்சேர்த்தும், கெணபாடம், காரிகாவளி, தாதுபாட முதலிய

விவரணங்கள் படித்தும், வியாக்கியானங்களெழுதியும் பூரணம் செய்திருக்கின்றனர்.

(43) தமிழிற் றொல்காப்பியம் சிறந்தநூலாயிருந்தும் அதனைப் பின்பற்றி இலக்கணநூல் செய்யப்புகுந்தவர் அதிற்சொல்லிய விஷயங்களையே தொகுத்தும், விரித்தும் தனித்தனி நிரம்புதலில்லாத பலநூல்களைச் செய்தாரே யல்லது அத்தொல்காப்பியத்திற்கே வேண்டுமிடங்களுக்கு உரைச்சூத்திரம், விகற்பவரையறை முதலிய வேண்டுமிலக்கணங்க ளெழுதிச் சேர்த்துப் பூரணம் செய்தாரில்லை. அன்றியும் வீரசோழியம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து முதலியநூல்களும் வடமொழியிலக்கணப் போக்கிவ்வாறெனச்சிறிது காட்டியவல்லது அவற்றுளொன்றையாயினு மவை முடிவுபெறச் சொல்லவில்லை. அங்ஙனமாயினும் அவ்விதிகளை வழிகாட்டியாகக் கொண்டு, இனித் தமிழிலக்கணஞ் செய்யப்புகுவோ ரொவ்வொருவரும் ஒவ்வோரிலக்கணத்தையே கண்டாராய்ந்து வேண்டும்விதிகளைக் கோவைப்படத்தொடுத்துக் குறைவறமுடிப்பாராயின் வடமொழியிலக்கணம்போலத் தமிழிலக்கணமும் சிறந்து தலையெடுக்குமென்ப தொருதலை.

(44) வடமொழியில் நூற்பொருள்கள் வியாக்கியானங்களால் நன்கு விவரிக்கப்படுவதுடன், வியாக்கியானங்களின் வியாக்கியானங்களும் அவற்றின் வியாக்கியானங்களுமாகிய வியாக்கியான பரம்பரைகளாலுந் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறு தமிழி லொரு நூலுக்காவது உரையெழுதப்பட்டிருப்பதாகக் காணப்படவில்லை. "திருவாய்மொழி" முதலிய சில வைஷ்ணவ நூல்களுக்குமட்டும் அவ்வாறுரை யெழுதப்பட்டிருப்பினும் அவை வடமொழிவிரவிய மணிப்பிரவாள நடையாலாக்கப்பட்டிருத்தலாலும் ஒரு சமயக்கோட்பாடு பற்றியனவாயிருத்தலாலும் தமிழ்ப்புலவராகப் பெயர்படைத்து வருபவர்க்கெல்லாம் பொதுமையிற் பயன்படுதலில்லை. ஆயினும் அவை "வடவேங்கடம்" என்னும் எல்லைகடந்து வடவிந்தியாவிலும் சென்று தமிழைச் சிறிது பரவச்செய்து வருகின்றன.

(45) அறிவு வளர்ச்சிக்குரிய பலவகை நூல்களாலும் நிரம்பி யுலகெங்கும் பரவி யெல்லாராலும் பயிலப் பெற்றிருந்த வடமொழி

இக்காலத்து உலகவழக்கொழிந்து நூல்வழக்காய் நிற்பதும் ஆராயத் தக்கதே. ஆதலாலதனைக் கற்பவர்க்குப் பிறிதொரு மொழியினுதவி வேண்டப்படுகிறது.

(46) தமிழ்மொழி யிருவகை வழக்கினு நிலைபெற்றிருக்கின்றமையாற் றமிழ்மக்கட்குப் பிறிதொருமொழியினுதவி வேண்டாமலே கற்றற்கெளியதாயிருக்கின்றது.

(47) வடமொழி யரியமுயற்சியிற் பிறக்கும் பல வேறு சிறப்பெழுத்துக்களையுடையதா யிருத்தலால் அரிதின் வழங்கற்பாலது.

(48) வடமொழியில் வேற்றுமையுருபுகளும், வினைப்பகுதிகளும் ஈறுபற்றியும், பொருள்பற்றியும் வேறு வேறாக மாறுபட்டுத் திரிபடைதலால் அவை வழக்காலுணர வியலாது இலக்கண நூலாலுணரத் தகுவனவாம். தமிழில் அவை சிறிதுந் திரிபடையாமையால் நூலுதவி வேண்டாமலே வழக்காலுணரக்கிடக்கின்றன. தமிழ்ச் சொற்களின் றிணையும் பாலும் பொருள்பற்றியவாதலா லெளிதிலுணரத்தக்கன. வடமொழியில் எண்ணென்றொழிந்த பிறபாலும், திணையும் சொல்லொன்றையேபற்றி வேறுபட்டுநிற்றலா லவையும் வழக்காலுணரவியலாது நூலுதவிகொண்டே யுணரக்கிடக்கின்றன. இத்தகைய வேறுபாடுகளால் வடமொழி யரிதிற் பயில்வதாயும், தமிழ் எளிதிற் பயில்வதாயுமிருக்கின்றன. ஆதலால் வடமொழிவழக்கிறந்துபடத் தமிழ்வழக்கு நிலைபெற்றதுபோலும்.

(49) வடமொழியிற் கவிதைகள், மாத்திரை யளவான் வரையறுக்கப்பட்ட சந்தமொன்றையே பற்றிய செந்தொடைகளாலியற்றப்படும் எதுகை மோனைகள் பிராசம் அநுப்பிராசம் எனச் சொல்லணியின்பாற்பட்டுவிரும்பிய ஒரோவிடத்து வருவனவின்றிக் கவிதைகளிலெல்லாம் வரவேண்டுமென்னும் நியமமில்லை. ஆதலாற் கருதிய பொருளை யெளிதின் அமைத்தற் கியல்வதாம்.

(50) தமிழிலும் அவ்வாறு செந்தொடைச் செய்யுட்களும் செய்யத்தகுமாயினும் அவை சிறுவரவிற்றன்றிப் பெருவழக்கின்மையால் அவற்றை யொதுக்கிவைத்து, நூல்களால் மோனை எதுகை

முதலியன செய்யுளுக் குறுப்பாக நியமிக்கப்பட்டமையாற் கவிதைகள் கருதிய பொருளை வெளிதினமைத்தற்கரியவாயும் மனனஞ் செய்தற் கெளியவாயுமுள்ளன. இவை நான்கடியும் எதுகைபெறும் விருத்தம், கலித்துறை முதலியன. பண்டைக்காலத்தோரிச்செய்யுட்களை மிகக்கையாளாது ஈரடி யெதுகையினுஞ் செந்தொடையினுமமையும் வெண்பா, அகவற்பாக்களும் பிறவுமே கையாண்டுவந்ததும் வடமொழிச்செய்யுட் போக்கைத் தழுவியதே.

(51) அன்றியும் வடமொழிப் பொருணோக்கைத் தழுவியும் பண்டைக்காலத்தோருஞ் செய்யுளியற்றுவதுண்டு. இதனை

"மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவ முடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்க்கண்ணாக
வியன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்பது
தீதற விளங்கிய திகிரியோனே." என்னும் நற்றிணைப் பாட்டு.

" 𑌭𑍂𑌃 𑌪𑌾𑌦𑍌 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌭𑌿𑌰𑍍 𑌵𑌿𑌯𑌦𑌸𑍁𑌰𑌨𑌿𑌲𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 𑌚 𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌕𑌰𑍍𑌣𑌾𑌵𑌾𑌶𑌾𑌃 𑌶𑌿𑌰𑍋 𑌦𑍍𑌯𑍌𑌰𑍍𑌮𑍁𑌖𑌮𑌪𑌿 𑌦𑌹𑌨𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾𑌸𑍍𑌤𑍇𑌯𑌮𑌬𑍍𑌧𑌿𑌃 " என்னும் சுலோகப் பொருளைப் பெரும்பாலுந் தழுவியிருத்தலாற் காண்க.

(52) வடமொழி நூல்களைத் தழுவித் தமிழிற் செய்யப்பட்ட நூல்களும் பல சிறந்தன. அவை பாரதம், இராமாயணம், கந்தபுராணம், சிவஞானபோதம், ஞானவாசிட்டம், திருக்குறள், நாலடி, சிந்தாமணி முதலியனவாம். வடமொழிப்பெயர் புனைந்த நூல்களும் பல; அவை ஏலாதி, திரிகடுகம், மணிமேகலை, சிந்தாமணி, நீலகேசி, சூடாமணி முதலியனவாம்.

(53) வடமொழிப்புலவர் பெயர்படைத்த தமிழ்ப்புலவரும் பலருளர். அவர் கபிலர், பிங்களர், தண்டி, காகபாடினி, (காகஹாஷிணி) கீரர், (க்ஷீரஃ) வான்மீகர், மார்க்கண்டேயர், வாமனர், கௌதமர் முதலாயினோர்.

(54) இவ்வாறாக வடமொழியுந் தமிழுந் தொன்றுதொட்டுத் தொடர்புடையவாயிருத்தலாலும், அத்தொடர்பாற் றமிழுக்கொரு குறைவுபாடு மில்லாமையாலும் தமிழ்வளர்ச்சிக் குபகாரமாயமைவ தாலு மிகழத் தக்கதன்று.

(55) இன்னும் வடமொழியினின்றும் தமிழிற்கு மொழிபெயர்த் துக்கொள்ளவேண்டிய நியாயநூல்களும், ஞானநூல்களும், நீதிநூல் களும், இலக்கணநூல்களு முதலிய பலநூல்களுள்ளன. அவைகளும் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டும். திருக்குறள், தொல்காப்பி யம் முதலிய சிறந்த நூல்களுக்கும் வடமொழிமுறையே உரைக் குரையாய்வரும் வியாக்கியான பரம்பரைகளு மெழுதப்படவேண்டும். ஆங்கில பாஷையிலிருந்தும் அறிவுவளர்ச்சிக்குரிய பலவகை நூல்க ளும் மொழிபெயர்ப்பாற் றமிழிலியற்றப்படவேண்டும். இங்ஙனமிய லிற் றமிழ்மொழி தழைத்தோங்கி வளருமென்பதிற் றடையென்னை.

(56) தமிழ் நாட்டினுள்ள ஸம்ஸ்கிருத பண்டிதரும், தமிழ்ப் பண்டிதரும், ஆங்கிலபண்டிதரும் இவற்றை ஆராய்ந்தறிந்து அறிவு வளர்ச்சிக்குரிய பலவிஷயங்களையும் தம்மாலியன்றவளவு தமிழிலெ ழுதிப் புத்தகரூபமாகவும், பத்திரிகை வாயிலாகவும் தமிழ்மக்கட்குத வித் தமிழை யபிமானிக்க முன் வருவாராக.

பத்திராதிபர்.

உ

நாலடியாராராய்ச்சி.

(௨௦க-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

நாலடியாரில் 200-வது 296-வது செய்யுட்களில் முத்தரையர் என்னும் சிறப்புப் பெயர் தனியாக வொருவனை மட்டுஞ் சுட்டாது ஒரு வகுப்பினரையே சுட்டிக்காட்டல் "செல்வரைச் சென்றிரவாதா ரே பெருமுத்தரையர்" என்றதனால் நன்குவிளங்கும். ஆகலின்

நாலடியாரிற் சிறப்பித்துக்கூறப்பட்டுள்ள பெருமுத்தரையர் சந்ததிக் கோயிலிற் பாவலர்களாற் புகழ்ந்து பாடப்பட்டுள்ள சுவரன்மாறன் பெரும்பிடுகு முத்தரையன்குலத்தவரேயாவரென வறியலாகும். இப் பெருமுத்தரையர் சந்ததியார் எத்துணை தலைமுறை யாட்சிசெலுத்தி னரென்பது தற்காலம் நன்கறியப்படாவிடினும் இவ்வம்சத்தார் ஏழாவது எட்டாவது நூற்றாண்டுகளிலிருந்தவராவரென்பதுதுணிபு. ஆதலின் அவர்கள் காலத்தினதாகிய நாலடியாரும் ஏறக்குறைய கி. பி. 7-வது 8-வது நூற்றாண்டுகளின் காலத்தினதாகவேயிருத் தல்வேண்டுமென்பதற்கையமில்லை. (Vide Reports on Epigraphy, para 9 of 1896—97; paras 19—22 of 1898—99; para 22 of 1906-07 and South Indian Reports by Dr. E. Hultzsch, Vol. I, page 11.)

நாலடியாரிலுள்ள சிற்சில செய்யுட்களும் திருக்குறளிலுள்ள சிற்சிலகுறள்களும் பொருளமைப்பின்மட்டுமேயல்லாது சொல்லமைப் பிலும் ஒத்திருக்கின்றன. 'திருக்குறளை மேற்கொள்ளாத நூலும் புகழாத மாந்தருமில்லை' யென்பர் பொதுவாகத் தமிழறிஞர் எவரும். நக்கீரர், சீதலசாத்தனார், இளங்கோவடிகள், சுந்தரமூர்த்தி நாயனார், நம்மாழ்வார், நம்பியாண்டார்நம்பி, கம்பர் ஆதிய பேரறிஞர்கள் தந் தம் நூல்களில் மேற்கொண்டுள்ளதிருக்குறளில் அந்நூலாற் றம்பு கழை யாண்டும் பரப்பிய வாசிரியரும் நாலடியாரைக்கண்டு அதனுளி ருந்தும் சிற்சில கருத்துக்களையும் சொற்களையும் எடுத்துத் தாமும் சிற்சில குறள்களை அமைத்துக்கொண்டிருக்கின்றனரென்பது நாலடி யாருக்குப் பெருஞ்சிறப்பையேதரும். ஆயினும் இப்பழியையும் அத் தெய்வப்புலவர் தலைமீதுசுமத்த நந்தமிழர் துணிவரோவென யாமறி யேம். மேலும் திருக்குறளிற் பொருளை அறம் பொருள் இன்பம் என முப்பாற்படுத்தி யிருப்பதுபோலப் பதுமனாரும் நாலடியாரிலுள்ள செய்யுட்களை முப்பாற்படுத்தி யொருநூலாக்கி யமைத்தனரென்ப. இக்கூற்றுத், திருக்குறளுக்குப்பின்னதேயாகும் நாலடியாரென்பதனை வலியுறுத்துகின்றது. அடியில் வரும் குறள்களையும் (நாலடியாரி லுள்ள) வெண்பாக்களையும் உற்றுநோக்குக.

(1) "நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு." திருக்குறள் 782.

"பெரியவர் கேண்மை பிறை போல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு".

நாலடியார் 125.

(2) "பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்".

திருக்குறள் 146.

"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்".

நாலடியார் 82.

(3) "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு".

திருக்குறள் 338.

"கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவாரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து".

நாலடியார் 30.

இனி யடுத்ததாக யாம் ஆராயப்புகுவது திருக்குறளையல்லாது வேறு நூல்களையுந்தழுவி யமைக்கப்பெற்றனவாக நாலடியாரினின்று சில செய்யுட்களை எடுத்துக் காட்டலும் இயலுமோவென்பதேயாம். நாலடியாரிற் சில செய்யுட்கள் பர்த்துருஹரி நீதிசதகம் முதலிய வடமொழி நூல்களிலுள்ள சில சுலோகங்களின் மொழிபெயர்ப்புக்களாகவே காணப்படுகின்றன. நந்தமிழ்நாட்டிற் பூர்வகாலங்களி லிருந்த ஜைநாசிரியர்கள் வடமொழிப் பயிற்சியும் தென்மொழிப் பயிற்சியும் மிக்குடையவராயிருந்தனரென்பதற்குப் பல வாதாரங்கள் சிலாசாஸநங்களினின்றும் பழைய புத்தகங்களினின்றும் கிடைக்கின் றனவாதலின் நாலடியாரில் ஸம்ஸ்கிருத கிரந்தங்களினின்றும் சில

சுலோகங்கள் செய்யுள் ரூபமாக மொழிபெயர்த்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்பதில் வியக்கத்தக்க தொன்றுமில்லை. அவைகளிற் சில கீழே காட்டுவாம்.

(1) "𑌆𑌰𑌮𑍍𑌭𑌗𑍁𑌰𑍍𑌵𑍀 𑌕𑍍𑌷𑌯𑌿𑌣𑍀 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣
𑌲𑌘𑍍𑌵𑍀 𑌪𑍁𑌰𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑍀 𑌚 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 ।
𑌦𑌿𑌨𑌸𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌧𑌪𑌰𑌾𑌰𑍍𑌧𑌭𑌿𑌨𑍍𑌨𑌾
𑌛𑌾𑌯𑍇𑌵 𑌮𑍈𑌤𑍍𑌰𑍀 𑌖𑌲𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 ॥"

பர்த்துருஹரி நீதிசதகம்.

இச்சுலோகத்தின் பொருள்:—முற்பகலின் நிழல் முன் நீண்டு பின் குறுகுவதுபோல் தீயோர்களது நட்பு முறையே குறையும். பிற்பகலின் நிழல் முற்குறுகிப் பிறகு நீளுவதுபோல் நல்லோர்களது நட்பு முறையே நீளும்.

"நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
யல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு."

நாலடியார் 166.

(2) "𑌵𑌿𑌰𑌹𑍇𑌽𑌪𑌿 𑌸𑌙𑍍𑌗𑌮𑌃 𑌖𑌲𑍁
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌙𑍍𑌗𑌤𑌂 𑌮𑌨𑍋 𑌯𑍇𑌷𑌾𑌮𑍍 ।
𑌹𑍃𑌦𑌯𑌮𑌪𑌿 𑌵𑌿𑌘𑌟𑌿𑌤𑌂 𑌚𑍇
𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑍋 𑌵𑌿𑌰𑌹𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌯𑌤𑌿 ॥"

பர்த்துருஹரி நீதிசதகம்.

இச்சுலோகத்தின் பொருள்:—எவர்களது மனது ஒன்றோடொன்று ஒட்டியிருக்கின்றதோ அவர்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிந்திருப்பினும் ஒன்று சேர்ந்திருப்பவரேயாவர். நெஞ்சம் சிலநாளுமொட்டாது பிரிந்திருக்குமாயின் அவரது சேர்க்கையினும் பிரிவே நன்றாகும்.

"பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சிற்
சிலநாளு மொட்டாரோ டொட்டார்—பலநாளு
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரொ டியாத்த தொடர்பு."

நாலடியார் 214.

(3) "𑌇𑌕𑍍𑌷𑍋𑌰𑌗𑍍𑌰𑌾𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌶𑌃 𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌯𑌥𑌾 𑌰𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 ॥ 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑌜𑍍𑌜𑌨𑌮𑍈𑌤𑍍𑌰𑍀 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾 ॥"

சார்ங்கதர பத்ததி.

இதன்பொருள்:—கரும்பினது நுனியிலிருந்து அடிப்பக்கம் செல்லச் செல்லச் சுவை அதிகப்படுவதுபோல் நல்லோர்களது நட்பு நாளுக்கு நாள் விருத்தியடையும். அல்லாதார் நட்பு இதற்கு மாறுகும். (அதாவது அடிப்பக்கத்து நின்று நுனி நோக்கித்தின்று சென்றதற்கொப்பாகும்.)

"கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமி லாளர் தொடர்பு."

நாலடியார் 138.

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின்றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுரமி லாளர் தொடர்பு."

நாலடியார் 211

(4) "𑌮𑌹𑌾𑌜𑌨𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃 𑌕𑌸𑍍𑌯 𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑌿𑌕𑌾𑌰𑌕𑌃 ।
𑌰𑌥𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑍁 𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑍀 𑌸𑌂𑌗𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑍈𑌰𑌪𑌿𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌤𑍇 ॥"

ப்ரஸங்க ரத்னவளீ.

இச்சுலோகத்தின் பொருள்:—பெரியோரது சேர்க்கை எவருக்குத்தான் பெருந்தகைமையை உண்டுபண்ணாது? சலதாரைநீரானது கங்கைநதியில் வீழ்ந்து அதனோடு ஒன்றுபட்டதுகொண்டு வானோராலும் வணங்கப்படாநின்றது.

“ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.”

நாலடியார் 175.

(5) “𑌸𑌾𑌧𑍁𑌰𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌯𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌵𑌿𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ।
𑌶𑍁𑌷𑍍𑌕𑍋𑌽𑌪𑌿 𑌹𑌿 𑌨𑌦𑍀𑌮𑌾𑌰𑍍𑌗𑌃 𑌖𑌨𑍍𑌯𑌤𑍇 𑌸𑌲𑌿𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌭𑌿𑌃॥”

ப்ரஸங்க ரத்னவளி.

இதன்பொருள்:— நல்லோன் கைப்பொருளெல்லாம் கரைந்த வறியனாக விருப்பினும் அந் நல்லோனையே யடுத்து எக்காலத்தும் யாசித்தல்வேண்டும். நீர் வற்றி ஆறு வறண்டுகிடப்பினும் நீர் விருப்புள்ளோர் அவ்வாற்றையே தோண்டுவார்கள்.

“எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவ
ரற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும்.”

நாலடியார் 150.

(6) “𑌉𑌪𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌃 𑌸𑌮𑌰𑍍𑌥𑍋 𑌨 𑌤𑌥𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌕𑍂𑌪𑌸𑍍𑌤𑍃𑌷𑌾𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌸𑌤𑌤𑌂 𑌨 𑌤𑍁 𑌵𑌾𑌰𑌿𑌧𑌿𑌃 ॥”

குஸுமதேவரியற்றிய திருஷ்டாந்த கலிகாசதகம் 13. (காவிய மாலை, 14-வது குச்சகம் 70 ஆவது பக்கம் பார்க்க.)

இதன்பொருள்:-செல்வப்பெருக்கில்லாததது காரணமாகச்சொற்ப மனிதனெனக் கொள்ளப்படுபவன் எவ்வாறு உபகாரஞ்செய்யத்திறமையுடையவனோ அவ்வாறு உபகாரஞ்செய்யச், செல்வப்பெருக்குளதுகொண்டு மட்டும் பெரியவனெனக்கொள்ளப்படுபவன் வல்லவனாகான். பெரும்பான்மையும் சிறு கிணறே எக்காலத்தும் தாகத்தைத்தணிக்கின்றது. தண்ணீர் மிகுதியாயுள்ள கடல் தணிப்பதில்லை.

"மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை."

நாலடியார் 263.

(7) "ஜ்ஞாதா நீசோ'பி ஸேவ்ய꞉ ஸ்யாந் நிஷ்காமோ ந மஹாநபி।
ஜலார்த்தீ வாரிதிம் த்யக்த்வா பஶ்ய கூபம் நிஷேவதே" ॥

இதன்பொருள்:—ஈயுமவன் தாழ்ந்த வகுப்பினனாயினும் அவனையே சார்ந்தடைதல்வேண்டும். பயன்படாதவன் மேல்வகுப்பினனாயினும் அவனைச் சார்ந்தடைதலாகாது. நீர்விருப் புள்ளோன் நீர்மிகுதியுள்ள கடலைவிட்டுச் சிறு வடிவினதாகிய கிணற்றைத் தேடிச்செல்வான்காண்.

"எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை."

நாலடியார் 275.

(8) "யத்யப்யுபத்ரவஶதைரபிஹந்யமாநா꞉
ஸந்த꞉ ஸ்வயம் பரஹிதே விஹிதாபியோகா꞉ ।
சந்த்ரோ விதுந்துததந்தகதோ க்ரஸிதைகபார்ஶ்வ꞉
பார்ஶ்வாந்தரேண ஜகதாம் திமிராபஹம் கரோதி ॥"

இதன்பொருள்:—நற்குடிப் பிறந்த நல்லோர்கள் நூற்றுக்கணக்கான பல துன்பங்களால் வாடியிருப்பினும் பிறர்க்கு நன்மைசெய்ய நாடிநிற்பர். சந்திரன் இராகுவின் வாயிற்பட்டு ஒருபகுதி விழுங்கப்பட்டிருப்பினும் மற்றொருபகுதியால் உலகினிருளைப்போக்கி யதன் றுயரத்தை நீக்குவான்.

"ஒரு புடை பாம்பு கொளினு மொருபுடை
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்."

நாலடியார் 148.

(9) "உபபோககாதராணாம்
புருஷாணாமர்த்தஸஞ்சயபராணாம் ।
கந்யாமணிரிவ ஸதநே
திஷ்டத்யர்த்த꞉ பரஸ்யார்த்தே ॥"

இதன்பொருள்—பொருளைச் சேர்த்துவைப்பதையே தந்தொழிலாகக்கொண்டு அதனை வழங்காதவர்களின் செல்வம் தம்குடியிற்பிறந்த நல்லுருவமுடைய பெண் பிறனநுபவித்தற்காக விருத்தல்போலாகும்.

"கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்ரு விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ—மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் றுய்க்கப் படும்."

நாலடியார் 274.

(10) "தாதவ்யம் போக்தவ்யம்
தநவிஷயே ஸஞ்சயோ ந கர்த்தவ்ய꞉ ।
பஶ்யேஹ மதுகரீணாம்
ஸஞ்சிதமர்த்தம் ஹரந்த்யந்யே ॥"

இதன்பொருள்:—கொடுத்தல்வேண்டும்; அநுபவித்தல்வேண்டும். பொருளை வீணிற் சேர்த்துவைத்தல் ஆகாது. தேனீக்கள் ஈட்டிவைத்த பொருளைப் (அதாவது தேனைப்) பிறர் அபகரித்துக் கொண்டுபோகின்றனர்காண்.

"உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கெடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி."

நாலடியார் 10.

(11) "க்ஷௌத்ராஸ்ஸிக்தாபி ஸஞ்ஜநோ நஶ்வத்யாவாப்யம்
நிஷ்டீவிதா யைர்த்விஜைஸ்தீக்ஷ்ணதுண்டை꞉ ।
நீசோ ஜநோ மதுகரைர்விதம் தைவ்யதோ நா
ஹா ஸேவ்யந்த த்வதி யத்நமேவ ந வாத்யு ॥"

இதன்பொருள்:—நற்குடியிற் பிறந்த நல்லோன் பிறரால் எத்துணைதான் பழிகூறி இகழ்ந்துரைக்கப் படுவானாயினும் சொல்லத் தகாதனவாயுள்ள சொற்களைத் தான் சொல்லான். கரும்பு நொறுங்கிப் பொடியாம்படி நசுக்கப்படினும் இனிப்பாகிய சாற்றையே வெளிப்படுத்தும். தீயோன், பிறர் தனக்கு நூற்றுக்கணக்காகப் பல நன்மைகள் புரிந்து உதவினராயினும் அவர் செய்த நன்மைகளை மறந்து தன் மனநிலைகெட்டுக் கலகம்நேர்ந்தகாலத்தும் சொல்லத் தகாதனவாயுள்ள சொற்களை விளையாட்டிலும் சொல்லிவிடுவான்.

> "கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
> யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
> வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
> கூறுர் தம் வாயிற் சிதைந்து."

நாலடியார் 156.

(12) "ந்யக்ரோதஸ்ய யதா பீஜம் ஸ்வல்பம் ஸுக்ஷேத்ர ஸமர்ப்பிதம்। பஹுவிஸ்தீர்ணதாம் யாதி தத்வத்தானம் ஸுபாத்ரகம்॥"

இதன்பொருள்:—சுருங்கிய அளவினதாகிய ஆலம்விதை நல்லவிடத்து ஊன்றப்பட்டு முளைத்து வெகு விஸ்தாரமுடையதாக வளர்வதுபோலச், செய்யப்படும் அறம் சிறிதாயிருப்பினும் தகுதியுடையாரது கையிற்படுமாயின் சிறந்தோங்கி வளரும்.

> "உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
> யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
> தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
> வான்சிறிதாப் போர்த்து விடும்."

நாலடியார் 38.

(தொடரும்.)

டி. எஸ். குப்புசாமி சாஸ்திரி.

வானசாஸ்திரம்.

(உ௦ரு-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இடப்பெயர்ச்சிக்குத் தக்கபடி காணப்படும் வடுக்கள் மேலே சொல்லியபடி திருஷ்டிவிதிகளை யநுசரித்துப் புலப்படும். அதன் படி நாம் எங்கிருந்து பார்த்தாலுமே, அவை சூரியனிடத்து எப்படி ஓடினாலுமே பதினான்கு தினங்களுக்குப் புலப்படும். மறுபடியும் அவைபோகத் திரும்ப அவற்றைக்காண்பதற்கும் பதினான்கு தினங்கள் செல்லுகின்றன. அப்படித் திரும்பும்போது அவைகள் மாறுதலை யடைவதாற் றிரும்பஅவையேயெனக் கண்டறிவது கஷ்டமாகிறது. இவைகளை யளந்தாராய்ந்ததில் அவை ஒருநிதானமாகச் செல்லுவனவாயும், தாம் எக்கதியிற் சென்றுகொண்டிருந்தனவோ அக்கதியிற் செல்லுவனவாகவும் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

இப்படி வடுக்களாகக் காணப்பட்டு ஓடிக்கொண்டிருப்பவை யொவ்வொரு சிறு கிரகங்களாக விருத்தலமையாதோவென்ற ஐயம் உண்டானபோது அவைகளின் சலனகதியாலும், உருமாறுதலாலும் அப்படிப்பட்ட கொள்கை நிலைக்க ஆதாரமில்லை. இதுவுமன்றிச் சூரியன் நிலையாகவிருப்பதாகவைத்து இவைகள் (வடுக்கள்) ஓடுகின்றனவெனக் கொள்ளின் அவை ஒரே அளவான கதியுடையனவாக விருக்க ஏதுவில்லை.

இவைகளாற் சூரியன் கோளவடிவினதாக இருக்கின்றதென்பது நிதர்சனமாவதோடு, தன்னைச் (சூரியனை) சுற்றித்திரிவனவாகவும் பெறப்பட்டன. இதுவுமன்றி, அப்படிச் சுற்றுவதும் மேற்கிருந்து கிழக்கே சுற்றுவனவாகவும் நிச்சயிக்கப்பட்டன. அதாவது முன்னர்க்கூறியபடியே எல்லாக் கிரகங்களும் மேற்கிருந்து கிழக்குமுகமாய் ஓடுகின்றனவென்பதோடு (பிரமணம்) பரிவர்த்தனஞ் செய்கின்றன வென்பதாம்.

கோபர்நிகஸ் என்னும் வானசாஸ்திரி சூரியனைச்சுற்றி மற்றைக்கிரகங்கள் ஓடுகின்றனவெனக் கண்டுபிடித்தார். ஆயினும் அவர் சூரியன் நிலையாய் நிற்பதாகவே யெண்ணியிருந்தார். பிறகு ஜோர்தனோபுருனோ, கெப்ளர் என்போர் சூரியன் பிரமணம் செய்வதாகச் சந்தேகப்பட்டனர். ழான்பாப்ரீஸியன் (Jean fabricins) என்பவர்தான் ஆதித்த வடுக்களையும், சலனத்தையும் நிர்த்தாரணம் செய்தார். ஏற்கனவே சூரியனிடமுள்ள வடுக்களை மறுபடி யதே யிடத்திற்காண இருபத்தெட்டு நாட்கள் செல்லுமென்று கணக்கிட்டோம். ஆனால் அவை தோன்றியவிடத்திலேயே தோன்ற இருபத்தாறு நாட்களே போதும். நமது பூமி சஞ்சரிப்பதால் அந்தக் கறுப்பும் அதற்கு நேரேவர மிகுதி யிரண்டுநாளும் செல்லுகின்றன. அதாவது நாம் முதலிற்கண்டவிடத்திற்காணமல் மறுபடி இன்னுஞ் சிறிதுதூரஞ் சுற்றிவரக்காண்கிறோம் என்பதே. இப்பொழுது இந்த வடுக்களைக் கவனிப்போம். வடுக்களைப் பார்க்கும்போது அவை நடுவிற் கருநிறமுடையனவாயும், சுற்றிச் சற்றுப் பிரகாசமுடையனவாயும் புலப்படும். அந்தக் கருமையுள்ள பாகத்தைக் 'கிருஷ்ணை' (Umbrae) என்றும், பிரகாசம் பொருந்திய விடங்களைக் 'கிருஷ்ண சுக்கிலே' (Penumbrae) என்றும் விவகரித்திருக்கின்றனர். ஆயினும் இக் கிருஷ்ணையானது மற்றக் கிரகங்களிற் சூரியவொளிபடாத விடங்கள் இருண்டிருப்பதுபோலிராமற் சற்று ஒளியுடையதாகவே காணப்படுகின்றது.

இவைகளை யளந்தபோது ஒன்று 29000 மைல் குறுக்களவுடையதாகப் புலப்பட்டது. மற்றொன்று 50000 மைல் குறுக்களவுடையதாகவிருந்தது. 1839ல் பார்த்தவை வெகு பெரியனவாகவிருந்தன. 180000 மைல் குறுக்களவுடையனவாயும், 2400000000 சதுரமைல் விஸ்தீரணமுடையவையாகவுமிருந்தன. இந்த வடுக்கள் சூரியகோளத்தில் ஒரு பள்ளமாக விருக்குமாயின் நமது பூமி அதனில் எவ்வளவுக்குச் சமானமாகுமென யோசித்துப்பாருங்கள். இந்த ஆதித்திய வடுக்கள் அநித்தியமானதென்பதோடு ஒரு நாளைக்கொரு நாள் மாறும் இயல்பினையுடையனவாம். ஒரு சுற்றுச் சுழன்றுவருவதற்குட் சில இருந்தவிடமே தெரிவதில்லை. சில வெவ்வேறு

பல சிறு துண்டுகளாக விண்டும் போகின்றன. சிறியவைகளாகவிருப் பவையொன்று சேர்ந்தும் விடுகின்றன.

சூரிய கோளத்தின் நுனியிற் சிறுசிறு கீற்றுக்களாகக் காணப் படுகின்றன; இவை கிரணங்களெனப்படும். இவை சிறுசிறு மயி ரிழைபோன்ற கம்பிகளிலிருந்து 1000 மைல் நீட்டம் முதல் 40000 மைல் நீட்டமுள்ளனவாயும், 1000 முதல் 4000 மைல் அகலமுடைய னவாயுமிருக்கின்றனவெனப் பிலிப்ஸ் பண்டிதர் கூறுகிறார். இக்கிர ணங்கள் ஆதித்தவடுக்களைச் சுற்றியும் காணப்படுகின்றன. இவை களில்லாதவிடங்களிற் சூரியமண்டலம் கரடுமுரடாகக் காணப்படுகி றது. இப்படியிருப்பதைப் பார்ப்பதற்கு $2\frac{1}{2}$ அங்குல அகலமுள்ள நச் சுக்குழாய் வழியாகப்பார்த்தாற் றெரிந்துகொள்ளக்கூடும். ஆயினும் பெரிய குழாய்களைக்கொண்டு பரிசோதிக்கும்பொழுது அவை சோ திக்குவியல்களால் நிறைந்திருக்கின்றனவென்றும், ஒன்றற்கொன்று வித்யாசமான வெளிச்சத்தையுடையனவென்றும் தாரைகள் (Pores) என்று சொல்லப்பட்ட சிறுகட்புலனாகாத புள்ளிகளாற்பிரிக்கப்பட் டனவாயிருக்கின்றனவென்றும் சர் உவில்லியம்ஹெர்ஷெல் எழு தியிருக்கிறார். நாஸ்மித் என்னும் வானசாஸ்திரி இந்தத்தாரைகள் சில ஒளிக்குவியல்களுக்கு மத்தியிற்றோன்றும் பல கோணங்களை யுடைய இடைவெளியென்று சொல்லியிருக்கிறார்.

இதுவரையிற் சூரியனது பரப்பு, விஸ்தீர்ணம் சலனம் முதலிய வற்றைப்பற்றிக் குறிக்கப்பட்டது. இப்பொழுது அது எதெதுசேர்ந் துண்டாயிருக்கின்றதெனக் கவனிப்போம். இவ்விதமான எண் ணம் முதன்முதல் 1774ல் அலெக்ஸாந்தர் உவில்ஸன் என்பவரு க்கு உதித்தது, அவருடைய கொள்கையைப் போட், மிச்சல், ஸ்கு ரோட்டர் முதலியோர் வளர்த்துவரச் சர் உவில்லியம்ஹெர்ஷல், டாஸ் (Dawes) என்னும் இருவர்களாலும் முற்றுப்பெற்றது. உவில் ஸனின் கருத்துப்படி சூரியன் கறுத்த உருட்சியான கோளமாம். அதற்குச் சிறிது சிறிது இடைவிட்டு மூன்றுவித வாயுக்கள் (Gas) நிறைந்திருக்கின்றன.

முதலாவது மேகம், அதாவது சூரியனது மையத்துக்குச் சமீபமா யிருப்பது; பட்டையானமேகக்கூட்டமாய்த்தானே ஒளியைக்கொடுக்

காது தான்பெறும் ஒளியைப்பிரதிபலிக்கச்செய்வது. இந்தஉரையைக் கவர்வது மற்றொன்று. இது அதனுடன் சேர்ந்தோ சிறிது தூரத்திலோ இருக்கிறது. இது தானே பிரகாசத்தைக் கொடுக்கக்கூடிய மேகமண்டலம். இதன் வெளிப்புறம் "ஒளிமண்டலம்" (Photo-spneae) என்று சொல்லப்படும். அது சூரியவட்டத்தின் ஓரமாகப் புலப்படும். மூன்றாவதாகவுள்ளது, இந்தஒளி மண்டலத்தாற் பிரகாசிக்கக் கூடியதாயும், கண்ணாடியைப்போற்றெளிவுள்ளதாயும், மத்திய மண்டலத்திற்குச் சமீபம் அல்லது தூரத்திற்குத் தக்கபடி கனதியுடைய எல்லாவற்றையும் கவர்ந்திருப்பதாம்.

இப்படி முப்பொருள் கூடியிருப்பதால் எப்படி ஆதித்த வடுக்கள் உண்டாகுமெனக் கவனிப்போம். கறுத்தபாகத்தில் அடிக்கடி வாயுக்கூட்டங்கள் (Gaseous-masses) அதிக உஷ்ணத்தால் ஒளியுடையனவாக உண்டாவதாகக் கொள்வோம்; அல்லது அந்தமையத்தில் எரிமலைச் சத்துக்கள் உண்டாகி அவைவெளிப்பட்டு அடுத்திருக்கும் இரண்டு கவசங்களையுங் கிழித்துக்கொண்டு வெளிப்படுமாயின் சிறிய அல்லது பெரியதுவாரங்களோடு அக்கறுப்புப் பாகம் தோன்றுமென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நடுவிற் பல கோணங்களையுடையதான கறுப்புப்பொருளும் அதற்குமேல் ஒளிமண்டலமுந் தோன்றும். அது கிருஷ்ணசுக்கிலையென்னுமாதித்திய வடுவாம்.

ஆனால் ஒருசமயம் இதிற் செய்யப்பட்டரந்திரம் ஒளிமண்டலத்திற் (Photospnere) சிறிதாயும் அதற்கடுத்த மேகமண்டலத்திற் பெரிதாயும் இருக்கலாம். அதுவே கிருஷ்ணசுக்கிலையில்லாத வடுவாகக் காணப்படுகிறது.

அதுவன்றி ஒருக்கால் முதலுரையானதுசீக்கிரம்மூடிக்கொள்ளுமானால் அப்பொழுது வடுவின்றிக் கிருஷ்ணசுக்கிலை மாத்திரம் தோன்றும். ஒரு வாயுக்கூட்டத்திற் பிளப்பு உண்டாகுமானாற் சுற்றியிருப்பதெல்லாம் வேகமாகவந்து திறந்தவிடத்தைமூடுவது இயற்கையாகையால் அப்பொழுது அதிக ஒளியுண்டாகிறது. இதுதான் கிரணங்கள் உண்டாகக் காரணமாயிருக்கிறது. வடுக்கள் மறைந்தபிறகு அவையிருந்தவிடம் பழையபடி தன் சொரூபத்தையடையச் சிறிது

நேரம் பிடிக்குமாகையால் அதுவரையிற் கிரணங்களிலிருந்து அதிக ஒளியுடையனவாயிருக்குமெனவும் கொள்ளலாம். கிருஷ்ணே அல்லது கிருஷ்ணசுக்கிலேயாலுண்டான பள்ளம் இந்தவாயுமண்டலத்தால் மூடப்பட்டுக் கட்டியாகி அதிக ஒளியைக்கொடுக்கக்கூடும். இதனைத் தவிர்த்து அங்கு அடிக்கும் காற்றானது அதிகவேகமாய் ஒளிமண்டலத்தை யூடுருவிச் செல்லக்கூடியதாக விருப்பதால் வாயுமண்டலத்திலும், ஒளிமண்டலத்திலும் கொதிப்பு உண்டாகின்றது. சமுத்திரத்தில் அலைகள் உண்டாவதுபோல இந்தமண்டலங்களிலும்கொதிப்பால் உழுத பூமிபோல மேடுபள்ளங்களுண்டாவதால் துவாரங்களுண்டாகிச் சூரியன் கரடுமுரடாயிருப்பதாய்த் தோற்றுகிறது.

மற்றொரு கொள்கையாவது வானசாஸ்திரம் அறியாத பலரும் சொல்லும் கொள்கையாம். அதாவது சூரியனிடமிருந்து நமக்கு நேரே வருவன ஒளியும் உஷ்ணமுமேஎன்பதாம். இக்கொள்கை நாம் காணும் காட்சிகளுக்குச் சரியான உத்தரமாகாவிடினும் பலர் சொல்லிக் கொள்ளுகின்றனர். அது கெட்டியான (Solid) பதார்த்தமோ ஜலபதார்த்தமோ (Liquid) அதைப்பற்றிக் கேள்வியில்லை. இப்பொருள் ஒரு அடர்த்தியான மேகத்தாற் சூழப்பட்டு அதன் அதிஉஷ்ணத்தாற் புகைரூபமாகச் (Gas) செய்யப்படுகிறது. இப்புகைப்படலம் குளிர்ச்சி பெற்றபொழுது பூமியிலுள்ள நீரில் உஷ்ணம் தாக்கியவுடன் அவை நீராவியாக மாறிவிடுவதுபோற் சூரியனைச் சுற்றியுள்ளவைகளும் மாற அவைகளாற் சூரியன் மறைப்புண்டு தெரியும்பாகம் வடுக்களாகத் தோற்றப்படுகின்றன. இவ்விதமாக ஒரு திரையைப்போல் இந்த ஆவி எழும்பி மறைக்குமாயின் மேல்மண்டலம்தோற்றும்போது இது அதற்கு ஒருகிருஷ்ணவெள்ளையாகத் தோற்றுகிறது என்பர். இக்கொள்கைக்கும் அநுசரணையாகச் சில ஆதாரங்களுண்டாயிருக்கின்றன. அவையாவன 'வர்ணசோதனை' (Spectrum analysis) முதலியனவாம். வர்ணசோதனையாவது:—ஒரு பட்டை தீர்ந்த கண்ணாடியை எடுத்துச் சூரியகாந்தியிற் பிடிப்போமாயின் அதன்வழிவரும் ஒளியிற் பலவர்ணங்கள் கிழே காட்டக்காண்போம். இந்த ஒளிகளைக்கொண்டு இன்னின்ன ஒளியிருந்தால் இன்னின்ன உலோகம் அல்லது தாதுப்பொருள்கள் கலந்திருக்கிறதெனக் கண்டுபிடித்துச் சொல்லப்படுகிறது. அதன்

படி சூரிய ஒளியைச்சோதிக்கும்போது சோடியம், இரும்பு, நிக்கல், செம்பு, நாகம், வேரியம் என்பவைகள் இருப்பனவாகச் சொல்லப் படும்.

பூர்ண சந்திரனுடைய பிரகாசத்தினும் சூரியப்பிரகாசம் 8-லக்ஷம் பங்கு அதிகமாயிருக்கிறது. அதாவது 8-லக்ஷம் சந்திரன் ஏக காலத்திற்றோன்றினல் அப்பொழுதுள்ள பிரகாசம் சூரியனது பிரகாசத்துக்குச் சமமாகும் என்பதாம். இந்தப்பிரகாசத்துக்குக்கா ரணம் அதனிடம் உண்டாகும் புகைக்கூட்டத்தின் ஒளியாமென்று சிலரும், கடினம் அல்லது ஜலபதார்த்தமாகச் சூரியமத்தியில் ஒளி யுடையதாயிருப்பதாலென்று சிலரும் கூறுகின்றனர். சர் J. ஹெர்ஷெல் போன்ருேர் சூரிய ஒளி காந்தமும் மின்சாரமும் சேர்ந்த தெனவும், அது அப்படியே தோன்றும் ஒளிப்பொருளென்றும் கூறு கின்றனர்.

ஒளியை விட்டு இனி அதன் உஷ்ணத்தைப்பற்றிக் கவனிப் போம். இந்த உஷ்ணம் சூரியனிடத்தில் அதிகமாயிருக்குமென்ப தில் என்ன ஐயம். தூரம் அதிகமாக அதிகமாக உஷ்ணம் குறை வுபடும் என்னும் சூத்திரத்தின்பேரிற் கணக்கிடுவோமாயின், பூமி யில் ஒரு குறித்த இடத்தில் உண்டாகும் உஷ்ணத்தைக் காட்டி லும் மூன்று இலக்ஷம் மடங்கு அதிகமாயிருக்கும். ஒளிப்பொருள் ரசாயனப்பொருள்களிலிருந்து உண்டாகும் தீப்பொறியைப்போலச் சூரியனிடத்திலிருந்துமுண்டாகும் உஷ்ணத்தில் விளிம்புகளிலிருந் துண்டாகும் உஷ்ணத்தை விட மையத்திலிருந்து உண்டாகும் உஷ் ணம் கடுமையாகவிருக்கிறது. இது காரணமாகவே பூமியினுடைய * துருவபக்கங்கள் குளிர்ச்சியுள்ளதாயும், மத்திய ரேகைத் தலங்கள் அதிக உஷ்ணத்தைப் பெறக்கூடியவையாயுமிருக்கின்றன. இந்தக் கிரகத்திற்கும் பூமியிலுள்ள காந்த ‡ முனைக்கும் சம்பந்தமிருக்கிற தென்பதிலும் சந்தேகமில்லை. இதற்கு உதாரணமாக 1859- ஆம்

---

* துருவபக்கங்கள் பூகோளத்தின் வட புருவத்தையும் தென் புருவத் தையும் கூறுவது.

‡ காந்த முனை என்பது பூகோளத்தின் வட துருவத்தை அதன் சக்தி யாலேயே காந்தப்பொருள் சம்பந்தப்பட்டவை எல்லாம் வடமுகமாக இழுப்பது.

வருஷத்தில் மெஸ்ஸர்ஸ். காரிங்டன், ஹட்ஸன் இருவரும் தனித் தனியாகச் சூரிய வடுவைச் சோதித்துக்கொண்டிருக்கையில் அதி னின்றும் ஒரு பளபளப்பான சோதியொன்று கிளம்பி வெகுவேக மாய்ச் சூரியனுக்குக் குறுக்கே யோடக்கண்டனர். அதே சமயத் தில் கியூ (Kew) நக்ஷத்திர ஆபீசில் வைக்கப்பட்டிருக்கும் காந்த ஆராய்ச்சிக்குறி யந்திரத்தினும் குறிக்கப்பட்டிருப்பதாகத் தெரி வித்தனர். சிலர் சூரியவெப்பம் வரவரத் தணிவதாகச்சொல்லினும் இன்னும் அநேக கோடி வருஷங்களுக்கு உஷ்ணம் குறையாதென் பதிற் சந்தேகமில்லை. இதில் மனுஷர் வசிக்கக்கூடுமோவெனச் சிலர் கேட்கக்கூடுமாயினும் அக்கேள்வி நகைப்புக்கு இடந்தருவ தேயன்றி வேறன்று. சாதாரணமாகக் கடுவெயிலில் இருக்க முடி யாதிருக்க உஷ்ணத்திற்கு ஆதாரத்தினிடத்தில் வசித்தல் எப்படிச் சாத்தியம். ஆயினும் இச்சூரிய வெப்பமில்லாவிடிற் புல் பூடு சீவ ராசிகள் வசிக்கமாட்டா. இச்சோதி பரவாவிடின் மழைக்கு ஏது வில்லை. ஒரு காலம் உஷ்ணத்தைக் கொடுத்தாலும், ஒரு காலம் சீதளத்தைத் தரக்கூடியதும் இதன் சக்தியே. இது மாத்திரமல்ல. நமது பூர்வக்கிரந்தங்களிலும் "கதிரவன் கீழ்த்திசை நோக்கினு"னெ ன்பதுவே ஒரு சந்தோஷ அறிகுறியாகி மனத்திடை ஒருவித உற்சாக முதலியவற்றையுண்டாக்குகின்றது. இதுபோலவே மேல்நாட்டாருள் முதன்மைபெற்ற பிளீநி என்னும் யவனாசிரியரும் ஆகாயத்தி லிருந்து மாசுகளைச்சூரியன் களைவதுபோலவே மனிதனுடைய மன தைக் கலக்கும் மாசுகளையும் அகற்றுகிறான் என்றெழுதியுள்ளார்.

புதன்

இதுவரையிற் சூரியனைப்பற்றி எழுதப்பட்டது. சூரியனைச் சுற்றியோடு முதற்கிரகம் புதன். இனி அந்தவரிசையிற் கிரகங்களைப் பற்றி வியவகரிப்போம்.

புரட்டாசி மாதம் முதல் விடிவதற்குமுன் (சுக்கிரன் உதயமாகி வருவதற்குமுன்) சோதியுடைய நக்ஷத்திரமொன்றைக் காண்கிறோம். சிலர் வெள்ளிமுளைக்கவில்லை, செட்டிகுடிகெடுத்தான் கிளம்பியிருக் கிறதெனச் சொல்லக்கேட்டிருக்கலாம். அதுதான் புதன் என்னும்

கிரகம். மேல்நாடுகளில் அஸ்தமித்தவுடன் தெரியும். அங்கே அஸ்தமித்தபிறகு 90-விநாடிக்குக்குறையாமல் மாலைக்காலமென்னும் டிவிலைட் (Twillight) இருப்பதால் அப் பிரதேசங்களிற் றெரிகிறது. இக்கிரகம் சூரியனுக்கு முன்னும்பின்னும் ஆகாசத்திற் சஞ்சரிப்பதைக்கொண்டே இது சூரியனைப் பரிவர்த்தனம் செய்து சுற்றியோடுகிற தென்பது நிச்சயிக்கப்படுகிறது. அப்படிச்சூரியனைச் சுற்றச் சற்றேறக்குறைய 88-நாட்கள் செல்லுகின்றன. சரியான கணக்கு 87-நாள் 23-மணி 15-நிமிஷம் 46 - செகண்டு எனப்படுகிறது. இந்தக் கணக்கு ஐரோப்பிய மாதிரியென்பது மணி, நிமிஷம் என்றவுடனேயே நன்குவிளங்கியிருக்கும். நமது பூர்வீகர்கள் புதன் தினம் ஒன்றுக்கு 4-பாகை 5-கலை 33-விகலை செல்லுவதாகக் * கணக்கிட்டிருக்கின்றனர். இந்தக் கணக்குப்படி 360-பாகை சுற்றிவர 87-நாட்களும், 58-நாழிகையும், சிலவிநாடிகளும் செல்லக்காணுவோம். நமது பூர்வீகர்கள் பூமியை மத்தியமெனக்கொண்டபோதிலும் வானசாஸ்திரமுறைக்கு யாதொரு தவறுதலும் ஏற்படவில்லையென மேலேகூறியிருப்பது ஞாபகமிருக்கலாம். அதனுண்மையை இதுவொன்றிலேயே யாராய்ச்சிசெய்துகொள்ளலாமாயினும் இன்னும் சமயம் நேர்ந்துழி ஆங்காங்குக் காட்டப்படும். புதன் சூரியனை 88-நாட்களிற் சுற்றியபோதிலும் நாம் மறுபடியும் அதேயிடத்திற்பார்க்க 106-முதல் 130-நாட்கள் வரையிற் பிடிக்கின்றன.

புதனையேயல்ல ஒவ்வொரு கிரகத்தையும் நாம் சாதாரணமாகக் கண்ணாற் பார்க்கும்போது அது ஒரு புள்ளியாகத் தோற்றுகிறதேயொழிய வேறு ஒருவிதமாகவும் தோற்றுவதில்லை. தூரதிருஷ்டிகொண்டு நோக்கும்போது இந்தக்கிரகம் காலத்திற்குத்தக்கபடிமாறுபடுகிறது. அதாவது இதுவும் சந்திரகலை ஏறி இறங்குவதுபோலவே தோற்றுகிறது என்பதே. அதன் கலாவிருத்திகள் சந்திரகலையிலிருப்பதுபோன்றே யிருக்கும். (தொடரும்)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

* செந்தமிழ் தொகுதி அ-பக்கம்-உகஎ. புதன் நித்தியகதி.

௨

"தீப்பாய்தல்."

ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாகிய தீ மண் புனலாதிபவற்றின் மறைந்து கரவாது, சகாயனாகிய காற்றோடு கலந்து காட்டம் முதலியவற்றைத் தழுவி நிலைக்கொண்டடர்ந்தெழுமேல்லை, தன்பாலடுக்கும் பலவற்றையுந் தகித்துச் சாம்பராக்குமியல்புடைத்தென்பதை யாவருமறிவர். கரந்தும் விரிந்தும் ஒளியியற்கூடே குணமெனக்கொண்ட இத்தீயானது வேள்வி, வதுவை, சரமக்கிரியை ஆகிய பல்வகைச் சடங்குகளாற்றுவதற்கும், போசன பதார்த்தங்களை அட்டுப்பாகஞ்செய்வதற்கும் மற்றுமிவைபோன்ற பலப்பல தொழிற்பொருட்டும் பாவிக்கப்படும் ஓர் உணர்விலாச்சடமாயினும், சித்துக்குரிய சில வியற்குறிகளையும் நூதனமாக இதனிடங் காலாந்தரங்களிற் காணலாம்.

ஆலமரத்தின் மெல்லிய இளவிழுதின் நுனிகளிற் சிலவற்றைக் கொய்தெடுத்து இன்னுஞ் சில பதார்த்தங்களுடன் கலந்து நெய்விட்டரைத்து உள்ளங்கைமிசை நன்றாகத்தேய்த்து உலர்ந்த சிறிது நேரத்தின் பின் கையில் நெருப்புப்பொறிகளை அள்ளிவைத்திருக்கச்சூடுதோன்றாது. வேறுமொரு மூலிகையை வாயில் மென்றடக்கிக்கொண்டு மற்றொரு மூலிகைச் சாற்றை முகத்திற்பூசிக்கொண்டு நெருப்பிற் சிவக்கக்காய்ந்த இரும்புக்குண்டுகளை வாயாற்கௌவி எடுக்கச்சூடு தோன்றாது. பொன்னரிதாரம் முதலிய சில சரக்குகளை வெற்றிலைச்சாற்றில் அரைத்துக் கையிற்பூசிக் காய்ந்தபின் கொதிக்கிற நெய்யில் வேகும் பலகாரம் முதலியவற்றைச் சூடுதோன்றாமல் அள்ளி எடுக்கலாம். இன்னும் இவைபோன்ற பல சாலங்களை இயற்றுந்தோறும் தீக்கு இயல்பாயுரிய சூடு அடக்கப்படுவதற்குக் காரணம் ஆங்காங்குப் பிரயோகிக்கப்படும் மருந்துகளின் தத்துவ வசிகரமாதலின் அங்ஙனம் வியப்புறத்தக்க விசேட நூதனமில்லையென்க. ஆயினும், நூதனம்போன்று தோன்றுவனவும் வேறு பலவுண்டு.

அசோகவனத்தின்கண் சிறையமர்ந்த சீதாபிராட்டியார், இராவணன் ஏவற்படி அனுமன் வாலிற்றீயிடப்படுஞ்செய்திகேட்டவுடன் பரிதவித்து, "ஓ! அக்கினிபகவானே!! எனது பிராணநாயகன் பூர்வம் என்னை மணம் முடித்தஞான்று நீ ஓமகுண்டத்திலொரு தெய்வச்சாட்சியாக விளங்கியிருந்ததும், இதுநாள்வரையும் அப்பெருமானுக்குரிய பத்தினிக் கடமைபூண்டு பதிவிரதாதர்மத்தின் வழுவாக் கற்புடன் யானிருப்பதும் சத்தியமேயானல், என்னிடம் வந்து பிராணேசன் கைம்முத்திரை தந்து விடைபெற்று மீளும் அனுமனை நீ வருத்தற்க" என்றிரந்து வேண்டலும், பாவகன் அவ் வேண்டுகோளைச் செவ்விதினுணர்ந்தாற்போன்று தனது வெங்கனற்சுவாலையை அனுமன்மாட்டுச் சுருக்கி அரக்கர்மாட்டுப் பெருக்கியது ஒரு நூதனமன்றோ! ஜானகி சிறைநீங்கியஞான்றுந் தன் மேற்காதலன் சந்தேக நீங்கி மனப்பூர்வக மகிழ்ச்சிகொள்ளுமாறு தீயின்மூழ்கியெழுந்தனளென்றுஞ் சரிதைகள் கூறும்.

நாடுநகர் தணந்து காசியை நோக்கிய அரிச்சந்திரன், வழியிலே அக்கினியாறு எதிர் மறித்தபோது தனது பத்தினியாகிய சந்திரமதி முன்னடக்கத் தானும் மந்திரியும் மைந்தனெடு பின்றொடர்ந்து அதனை விக்கினமின்றித் தாண்டிச்சென்றதாகக் கூறப்படுஞ் சரிதமும் மெய்யாயின், அக்கினி பதிவிரதைகட் கடங்குமியல்பு வியக்கற்பாற்றே.

தலைவற்பிரிந்து கொடுங்கானிற் றனித்தலைந்த தமையந்தியைப் பாம்பின் வாயினின்று பறித்தெடுத்த வேடுவன் அவளை மோகித்துத்தீக்கட்புலிபோற் றொடருதலும் அன்னாள் போக்கற்றுச் சீறுவிழிப்ப அவ்வளவில் நீறாய் விழுந்தனன் நிலத்திலென்றாற் பதிவிரதைகள்பொருட்டுப் பாவகன் பகைமுடித்தலும் வியக்கற்பாலதே.

பாஞ்சாலன் வளர்த்த யாகாக்கினியிற்றோன்றிய திரௌபதி பாண்டுமகார் ஐவரை வேட்டு அவர்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோராண்டு முறைகொண்டு வாழ்ந்து வந்ததாகவும் ஒருவர்க்குரிய வருடம் முற்றி மற்றவர்பாற்செல்லுழி அக்கினியின் மூழ்கியெழுந்து போதலை வழக்கமாகக்கொண்டொழுகினளென்றும் இதிகாசங்கூறு-

வது மெய்யெனில் அவள் தோய்ந்தாடக் குளிர்ந்திடங்கொடுத்த தீயின்றன்மையும் விநோதமானதே.

இங்ஙனங் கூறியவையும் மற் றிவைபோன்ற சம்பவங்களும் இந்துக்களின் பொய்பொதிந்த புராணவிதிகாசக்கட்டுக்கதைகளெனச் சொல்வார் பலருளர். அவர்கள், "மந்திரமுந்தேவும் மருந்துங்குருவுரையுங், ...மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியிற், பொய்யென்னிற் பொய்யாய்விடும்" என்றௌவை கூறியதை நினைந்துகொண்டு பின் சொல்லப்படும் உற்சவத்தையும் ஒருமுறை சென்று தரிசிக்கக்கடவர்.

இலங்கையின் கீழ்மாகாணத் தலைநகராகிய மட்டுநகரைச் சார்ந்தனவாய் அதன் தென்றிசைப் பாங்கரில் பழுகாமம், பாண்டிருப்பு என்றுரைக்கப்படுமிரண்டு தமிழ்க்கிராமங்களுண்டு. ஆங்குறைபவரிற் சீர்திருந்திய சிலரொழிந்த ஏனையோர் வெள்ளறிவுடைச் சாமான்ய நாட்டுச்சனங்களாயினும் பொதுவாகத் தமக்குரிய சமயபக்திமுதலிய நல்லொழுக்கத்திற் பெரிதும் சிறந்துளார். விநோதமாகிய ஜாலவித்தைகளைப் பயின்று கையாடி வருபவரல்லர். இளங்கோவடிகளாற் * சிலப்பதிகாரத்திற் றெய்வதநிலை கொடுத்துப் பாராட்டப்பட்ட கண்ணகிக்கு ஆலயங்களேற்பட்டு வழிபாடு நடைபெறுவதுபோலத் திரௌபதிக்கும் பலவிடங்களிலே கோயில்களுண்டு. மேற்சொல்லிய இரண்டு கிராமங்களிலுமுள்ள திரௌபதியம்மன் கோயில்களிலே பண்டுதொட்டு வருடமொருமுறை "தீப்பாய்தல்" "தீப்பள்ளயம்" என்று சொல்லப்படும் பெரிய உற்சவமொன்று தவறுமற் கிரமமாக நடைபெற்று வருகின்றது. திரௌபதி தீயிலே பிறந்து ஆண்டு

---

* "——தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடன் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம்பொய் யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னு
மத்தகு நல்லுரை யறியா யோநீ"—எனக்கூறுமாறு காண்க.

தொறுந் தீயாடிய வைபவங்குறிக்கொள்வான் மிக்க விமரிசையாய் நடைபெறும் இவ்வுற்சவத்தைச் சமீபத்திலுள்ள கிராமவாசிகள் மாத்திரமன்று தூரதேசத்தினரும் அதிவிருப்பொடு குழுமிவந்து தரிசித்துச் செல்வார்கள். இதன் விர்த்தாந்தங்களை முற்றுற விரிப்பின் மிகப்பெருகும்.

பன்னிருமுழ நீளத்தில் நான்குமுழ அகலமும் நான்குமுழத் தாழ்வுமுற* ஒரு குழியை நிலத்திலகழ்ந்து, காட்டிலுள்ள பச்சை மரங்களிற்றறித்த துண்டங்களைக் கொண்டுவந்து நிரப்பித் தீமூட்டிப் பகல்முழுது மெரித்து அந்திநேரத்தில் இந்தனமெல்லாஞ் செந்தழற் பரப்பாய்ச் சாம்பர் முதலிய மறுவெலாம் விசிறிகளா லகற்றப்பட்டுத், தகதகவென் றெறித்துச் சொலித்துக் கனலுமிழ்ந்துகொண்டிருக்கும்பொழுது, அறுவர் கடலினீராடிவந்து, ஒருவர் திரௌபதியாகவும் மற்றையோர் தருமன் முதலிய ஐவர்களாகவும் பாவனை கொண்ட தெய்வப் பிரசன்னத்தராய்த் தீக்குழிமிசைத் தங்கள் வெறும் பாதங்கள் படிந்தமிழ நடந்துசெல்வார்கள். ஒரேமுறையில் நடந் தோயாமற் புனலாடு மகளிர்போன்று வேட்கை தோன்ற, மீண்டும் மீண்டும் தீக்குழியைச் சூழ்ந்திறங்கி நடந்தேறித் திரிவார்கள். பக்கத்திற் சூழ்ந்துநின்று பார்ப்பவர்கள் அனலின் உக்கிர அகோரம் பொறுத்தற்கரியதாதலின் சற்றே தூரத்தில் நிற்பார்கள். அவர்களிற் சிலரைத் தீயாடுபவர் கைப்பற்றிவலிந்திழுத்துக்கொண்டு தம்மொடு குழியினடத்திச் செல்வதுமுண்டு. அவ்வகை உடன்சென்றாரைக் கேட்பின் தமக்கியாதொருவகைச் சூடும்பாதங்களிற் றுக்க வில்லை யென்பார்கள்.

தீமூட்டும் பிரதமத்தில், வெற்றிலை பாக்கு மஞ்சள் புஷ்பங்கள் சிலவற்றை மந்திரித்துக் குழியில்வைத்துத் தீப்பாய்தலொழிந்து கனலாறிய பின் அவற்றைச் சிறிதேனும் வாட்டமின்றி ஆதியில் வைக்கும் பொழுதிருந்த குளிர்ந்த மலர்ச்சியுடன் வெளியே கிளறி எடுப்பார்கள். மடைவைப்பு என்னுமிதுதவிர்ந்த வேறியாதொருவகை மணிமந்திரப் பிரயோகங்களாவது சாலவித்தைகளாவது சூதுகளா

*இது சிலவருடங்களின்முன் கடிதர்கண்ட தீக்குழியின் விசாலமாகும்.

வது தீயின் வெப்பத்தை அவிக்கும்பொருட்டுச் செய்வதில்லை. பாதங்களிலும் சூடுதாவாதிருக்கும்பொருட்டு யாதொருவகை வாரணை செய்வதுமில்லை. ஆகவே, தன்மிசை நம்பிப் பாய்ந்து நடப்பவர்களுக்குக் குளிர்மையையும் அயலினிற்பார்க்கு நெருங்கவொட்டா வெம்மையையும் கொடுப்பதற்கு இத்தீயின்கண்ணுள்ள புதுமை யாது? திரௌபதியின் பதிவிரதா தர்மமா அன்றிப் பாய்பவரின் பக்தியா பாவகனை வசப்படுத்துவது?

துஞ்சிய கேள்வரொடு ஈமத்தீப்புகுதலை வழக்கமாய்க்கொண்டொழுகிய தொன்மைய இந்திய பத்தினிகள் உளமஞ்சிக்கோணமற் புனல் தோய்வது போற் றீயின்மூழ்கி வேதனையின்றிச் சாம்பராவர் என்று பலசரிதங்களும் கூறும்.

> "காதலரிறப்பிற்கனையெரிபொத்தி
> யூதுலைக்குருகினுயிர்த்தகத்தடங்கா
> தின்னுயிரீவரீயாராயி
> னன்னீர்ப்பொய்கையினளியெரிபுகுவர்."

என்று மணிமேகலையிற் சொல்லியதும் பிறவுங்காண்க.

தமிழ்வேந்தரில் ஒருவனாகிய பூதப்பாண்டியன் இறந்தஞான்று எரிபுகப்போந்த அவன் மனைவி பெருங்கோப் பெண்டென்பாளைப் பலர்கூடித் தடுப்பவும் அமையாளாகிப் பின்வருமாறு கூறித் தன் னினைவை முடித்தாள்.

> பல்சான் றீரே பல்சான் றீரே
> செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
> பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
> யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
> காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
> தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
> வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
> வேளை வெந்தை வல்சி யாகப்
> பரற்பெய் பள்ளிப் பாயின் றுவதியு
> முயவற் பெண்டிரே மல்லே மாதோ
> பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீம

நமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.

ச. பூபாலபிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

அச்சிட்ட காழியந்தாதி.

தென்கமலைவாழ்வைத்தியநாதன்
பொன்னடிக்கமலப்போதினைச்
சென்னியிற்சேர்த்துதமதிசிறந்திடவே.

தென்றேயத்திற் காவிரிக்குத் தென்பாலுள்ள சிவஸ்தலங்களி லொன்றாயதும், "வம்பரு வரிவண்டு மணநாற மலரு மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணு, எம்பிரான் சம்பந்தன்" அவதரித்து ஞானப்பாலுண்டதும், மாவலியினது அபாரசக்தியை ஒழிக்கவெண்ணி மகாவிஷ்ணு வாமநாவதாரமெடுத்துத் தமது குறுகிய வடியாற்றொலைத்தோ மென்றிருமாந்த அவரை அழித்து "அங்கம் யாவுமோர் கதைய தாயத ளாடையாக் கொண்ட, சங்கவார் குழைச் சட்டை நாயக"னையுடையதும் சீகாழித்தலமாம். இத் தலத்திற்குப் புராணம் ஒன்றும், அந்தாதி ஒன்றும், சட்டைநாதர்பேரிற் பதிகங்களும், சிந்தும் பாடப்பட்டிருக்கின்றன. ஸ்தலபுராணம் செய்தார் இராமாயணகீர்த்தனைக ளியற்றிய அருணசலக்கவிராயர் என்பது அவர் இயற்றிய தோத்திரச்செய்யுட்களான் விளங்கும். காழியந்தாதியும் அவர் இயற்றியதாக அச்சிட்ட காழியந்தாதியின் முற்புறத்து முத்திரீகரிக்கப்பட்டிருக்கிறது. இதனையச்சிட்ட சிதம்பரம் வாமதேவமுருகபட்டாரகர் காலஞ்சென்று விட்டமையான் இன்ன ஆதாரத்தினைக்கொண்டு செய்தனரென்று சொல்வதற்கில்லை. ஆயினும் அவரை அதிகமாயறிந்தவரும், சீகாழித்தலபுராணம் அச்சிட்டவர்களுமாகிய, சீகாழி வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ சிதம்பரப்

பிள்ளையவர்களைக்கண்டு கேட்டகாலத்து, அதற்கு ஏது யாதுமில்லையென்றும், தலபுராணம் செய்தாரே அந்தாதி பாடியிருக்கலாமென்னும் உத்தேசத்தான் அப்படி அச்சிடப்பட்டதென்றும் கூறக்கேட்டேன். அப்படியாயின் ஒரு பெருநூல் செய்தார் அதற்கே சிறிய நூலும் செய்தல் நியமமன்று என்பது யாவருமறிந்தது.

இந்நூல் இலக்கணவிளக்க பரம்பரையிலுதித்த ஸ்ரீ தியாகராஜ தேசிகரால் இயற்றப்பட்டது. அவர் காழியந்தாதியைத் தவிர்த்து, தேவையந்தாதி, திருமுல்லைவாயிற் புராணம் முதலியவைகளும் பாடியிருக்கின்றனர். இலக்கணவிளக்கம் அச்சிட்ட காலஞ்சென்ற ஸ்ரீமாந். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும் தமது பதிப்புரையுள் அதேமாதிரி குறித்திருப்பதோடு, "இராமநாதபுரத்தில் மந்திரியாயிருந்த தாமோதரம் பிள்ளையினுற் சூரியன்கோட்டைக் கிராமம் பரிசு பெற்றும், விஜய அருணாசலவணங்காமுடியார் பேரிற் கோவையும் உலாவும் பாடித் தண்டிகை வரிசையும் மறவனேந்தல் முதலிய மூன்று கிராமமும் பரிசு பெற்றும் மிகச்சிறப்புற்றிருந்தனர் என்றெழுதியிருக்கின்றார். இவர் சூரியன்கோட்டைக்கிராமம் பரிசுபெற்றதையும் அதன் பலனையும் சுட்டி

தண்டமிழ்க் கவிராசர் வளர்தியாக ராசகுரு
 தான்மகிழ்ந் தெழுது மோலை
சகராசர் புகழ்வேள்வி வந்தபிச் சையூர்ச்
 சபாமுனி யினிது காண்க
யெண்டிசையி லொன்றவொரு மரனிழலு மின்றியாற்
 றிடிகரையு முடைகுள முமா
மேற்கரைப் பெருந்திடற் சூரியன் கோட்டையெனு
 மேந்தலை யெமக்க ளித்தாய்
கண்டகுடி களையழைத் தடையோலை மன்னிறைகள்
 கற்பித்து மற்று மவ்வூர்
கண்டபல னறியேங்க டன்வாங்கி வெட்டியும்
 கட்டியு முழுவ ளமையாற்
றெண்டனைகள் செய்துமோர் பயிர்முகங் காணுமுன்
 சேவகர் முகத்தில் வேறு
திருமுகங் காணிலென் செய்குவோ மேலுனது
 சித்தமெம் பாக்கிய மாமே.

என்று ஓலைத் தூக்கொன்று எழுதியிருக்கின்றார். காழியந்தாதி யிலேயே ௩௭-வது செய்யுளில்

இல்லங் கமலை யிருக்கநல் லோருற் றிருக்கவென்று
நல்லங் கமலை வினைதீர்ந் திருக்கவு *நாடினையாற்
செல்லங் கமலை யிடப்பாகர் காழியிற் சென்றுநெஞ்சே
வில்லங் கமலைகொண் டான்பேரி லொன்றை விளம்புகவே.

என்பதால் திருவாரூரின்கண்ணே வசிப்பானொருவன் பாடியது என்று இனிது விளங்கும்.

பாடியோரது கருத்தறியாதார் இல்லங்கமலை யிருக்க வென்பதற்கு இலக்குமி காடாக்ஷமிருக்கவென்றும் பின்னும் பலவிதமாயும் பொருள் கொள்கின்றனர். இவர் சட்டைநாதர்பேரிலும் சீகாழித் தலத்திலும் அன்புடையாரென்பதும் தோன்றத் தாம் பாடிய † திருமுல்லைவாயிற் புராணத்தே

உண்டகஞ்சுகஞ்செல்வமுண்டருளு............
முண்டகஞ்சுகமலர்தரப்பூம்பொழில்முகத்துப்
பண்டகஞ்சுகம்பயிலிசைக்காழியம்பதியிற்
கண்டகஞ்சுகனிணையடிபணிவதுகடனே.

என்று காப்புக் கூறியுள்ளார். இதுவன்றி அப்புராணத்தே அவையடக்கங் கூறும்போதும்

தென்மாந்தைவேளாளனிராகவன்சொல்வீரப்பன்சிந்தைப்போது
மென்மனமுந்தழைத்தோங்கமுல்லைவனச்சரிதைசிறிதியப்பலுற்றேன்
பொன்மகளைப்பொருந்தியமான்மண்மகளைப்பிரிந்தனனேபுலமைமிக்கோர்
நன்மதியாற்பேரானவடுகன்வாய்த்தமிழென்றுனவைசொல்லாரே.

என்று பெருமை பாராட்டுகின்றார்.

இவைகளன்றி வம்சமரம்பரை ஏடுகளிலும், சந்ததியாரிடத்தே யுள்ள வமிசாவளியிலும் இதேமாதிரி குறிப்பிடப்பட்டிருக்கின்றது கொண்டும் காழியந்தாதி பாடியது இலக்கண விளக்க பாரம்பரையிற்

---

* நாடினையேல் என்று அச்சுப்பிரதியிற் காணப்படுகிறது.

† இப்புராணம் இன்னும் அச்சிடப்படாதது.

ரேன்றிய தியாகராசதேசிகரேயாம். இதுவே வித்துவான் ஸ்ரீமத். முத்துத்தாண்டவராயபிள்ளை போன்றார்க்கும் துணிபாம்.

இவ்வந்தாதியைப் படிக்குமிடத்துப் பொருட்சுவைபொதிந்த பாண்ட மென்னலாம். ஈண்டு இரண்டொன்று குறிப்பிட்டு நிறுத்துவோம்.

சூழியந் தாதிக்குத் *தாவென நிர்த்தஞ்செய் சோதியிதழ்
வீழியந் தாதிக்குத் தூதுசென் றோன்முன்னோர் வேந்தனரு
ளாழியந் தாதிக்குத் தானியெனக் கங்கை யாறளித்தோன்
காழியந் தாதிக்குக் காப்பாகுங் காழிக் கணபதியே.

முற்றுமதிக்குமுகம்வாடுங்கிள்ளையைமோந்துபல்கா
லொற்றுமதிக்குமுரைசெய்யநாணுமுயிர்வருந்தச்
சுற்றுமதிக்குந்தியாயிரவைத்தொலைக்கவரு
மெற்றுமதிக்குமதென்னெனுங்காழியிறையவனே.

நம்பா னலந்தர நின்றோர் வண்டாடு நறுங்கமலக்
கொம்பா னலங்கரித் தூர்காழி நாதர்தங் கொச்சையின்பா
லம்பா னலங்கழி யேசெக்கர் மாலை யடுத்தநிலா
விம்பா நலம்பொருட் கேகின ரூருக்கு வெண்பிறையே.

தோயம்பரவைமுடிக்கணிந்தோர்தமிழ்த்தூதுகங்குல்
வாயம்பரவைமுன்சென்றோர்தென்காழியைவாழ்த்துநர்போ
லாயம்பரவையுறுமிடைநீரரிதாகிலென்ன
மாயம்பரவைவரைவாய்த்தனித்துமணந்ததுவே.

பல்லவம் போது துணையடி யேசெங்கை பங்கயமே
நல்லவம் போது மிணைவிழி யேசிறு நாண்மதிதான்
வில்லவம் போது நுதலே சிறிதன்பு மேவினுமவ்
வல்லவம் போது மென்னுன்காழி யீசர் வரைமகட்கே.

அறியாப் படிவினைக் காழிப் பிரானை யொராயிழைமுன்
செறியாப்படிதறிநின்றெழுந்தானைத்தினந்தமிழ்க்காய்
நெறியாப்படிமிசைக்காசுவைத்தானைநினைந்துசொல்வீர்
குறியாப்படிதொடுத்தல்லோரைப்பாடியென்கூடுவதே.

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

* தா தி. அநுகரணவோசை.

300

உ

நுண்பொருண்மாலை.

(தொகுதி கூ: பகுதி கஉ-ல் சூ0எ-ம் பக்கத்தொடர்ச்சி.)

ககககூக. "தாம்வீழ்வார்...........கனி."

நு - லை:—காழில் கனி - பரலில்லாதகனி. பரல் - கொட்டை. காமநுகர்ச்சி யென்றுரைத் தாகுபெயரென்றார்.

ககககூச. வீழப்...........ரெனின்."

நு - லை:—கெழீஇயின்மை நல்வினையின்மை; அருத்தாபத்திப் பொருள்கோள் காண்க.

ககககூரு. "ஒருதலையா..............மினிது."

நு - லை:—காவின்பாரமென்றுரைத்து, ஆகுபெயரென்றார். மூன் றனுருபுக ளேழன்பொருட்கண்வந்தன.

ககககூஎ. "பருவரலும்...........வான்."

நு - லை:—அகத்துட் காமனையுஞ்சொல்லலாமென்பதிதனாலறிக.

கஉ00. "உறாஅர்க்...........வாழியென்னெஞ்சு."

நு - லை:—அறிவும் புலனும் வேறுபடநிறீஇ யுணர்வுடையது போற் றெழிற்படுத்தடக்கல்காண்க.

கஉ0உ. "எனைத்தொன்...........றில்."

நு - லை:—தாம்வீழ்வார் - தம்மால் விரும்பப்படுவார்,

கஉ0௩. "நினைப்பவர்..... ......கெடும்."

நு - லை:—தும்மல் சினைப்பது - தும்மலெழுவது. சினைத்தல் - அரும்பல்.

கஉ0ரு "தந்நெஞ்சத்...........வரல்."

நு - லை:—தம்முடைய, எம்முடைய நெஞ்சமென விரித்து, அதுவென விரியாது அப்பொருட்டாகிய உடையவெனவிரித்தது காண்க.

கஉ0சா. "மற்றியா...........வுளேன்."

நு - லை:—மற்று, அன்றியின் வேறென நின்றது.

கஉக0. "விடாஅது...........மதி."

நு - லை:—படாதி படுதிக்கெதிர் மறை; நச்சினார்க்கினியாருஞ் சூழாதியெனக் காட்டினர். "கொடியவைகூறாதிபாண" வென்னு நாலடியுமது.

கஉகக. "காதலர்...........விருந்து."

நு - லை:—விருந்திற்குச்செய்புமுபகாரம் - விருந்தென்னுமதி காரத்துவிருந்துபோ லன்றென்பதற்கவ்வாறுரைத்தார்.

கஉகஉ. "கயலுண்கண்...........மன்."

நு - லை:—இரப்ப - இரந்தால்.

கஉகச. "கனவினு...........தாற்கு."

நு - லை:—தாற்கு - தருதலால்.

கஉஉக. "மாலையோ...........பொழுது."

நு - லை:—உயிருண்ணும் வேலையென்பது, "உண்டற்குரியவல் லாப்பொருளை, யுண்டபோலக்கூறலுமாமே" என்ற விதியானுண்ணப் படும் புலனாகாவுயிரஃதாகின்றதென்க. இச்சூத்திரஞ் செயப்படு பொருட்கென்க. வினைமுதற்கு வாராமரபினவரவென்பதனாலுஞ் செய்யாமரபி னென்பதனாலுமடங்கும். வேலையென்பதற்கு, வேலா யிருந்தாயென்பாருமுளர். மாலைநீ யல்லை யென்றும் பாடம்.

கஉஉஉ. "புன்கண்ணை...........றுணை."

302

நு - லே:—தன்னுட்கையாற்றை யதன்மேலிட்டுச் சொல்லியது. வருதிபெயர்தியென்னும்பாட்டுமது.

கஉஉடு. "காலேக்குச்............பகை."

நு - லே:—பகை ஆகுபெயர்.

கஉஉஎ. "காலே...............நோய்."

நு - லே:—போது - பெரிய அரும்பு. இஃதேகதேசவுருவகம்.

கஉஉஅ. "அழல்போலு............படை."

நு - லே:—பின்னின்ற போலுமென்பது அசை.

கஉஉகூ. "பதிமருண்டு...........போழ்து."

நு - லே:—மதிமருளவென்பது மதிமருண்டெனத்திரிந்தது.

கஉ௱க. "சிறுமை.......... கண்."

நு - லே:—நமக்கொழிய - நங்கண்ணேநிற்ப. ஈறுசினேயொழிய் வென்பதுமது. உள்ளி; உள்ளுதலாலெனக்காரணப்பெயர் காரியத் துக்காயவாகுபெயர்.

கஉ௱௨. "தணந்தமை...........தோள்"

நு - லே:—"தணந்தமை - தணவாமையென்னுமெதிர்மறைக் குடம்பாடு. துறந்தமையுமது.

கஉ௱௪. "பணேநீங்கிப்...........தோள்."

நு - லே:—பைந்தொடி - பசியபொன்னாற்செய்ததொடி. செந்தா மரை வெண்டாமரை யென்னுஞ் சினேப்பண்பு முதன்மேனின்றாற் போலப், பொற்பண்பு தொடிமேனின்றது. "சேனுந்திகழ்மதி" லென்னுங் கோவையாருட் பைம்பூணென்பதுமது. சோருமென்ற வளேத்தொழில் தோள் மேனின்றது. இலங்கிழாயுமது.

கஉ௱டு. "கொடியார்.. ....தோள்.

நு - லே:—கொடியராயுரைக்குமென்பது அப்பொருண்மைதோ ன்றநின்ற குறிப்புமொழி.

303

கஉஙசு. "தொடியொடு...........னுந்து."

நு - லை:— ஒடு வேறுவினைக்கண்வந்தது. மலையொடுபொருத மால்யானையென்பதுமது.

கஉசக. நினைத்தொன்று...........மருந்து."

நு - லை:—மாறுரைப்பதுபோன்றது. எவ்வம்-ஒன்றானுந்தீராமை.

கஉசங. "இருந்துள்ளி...........கணில்."

நு - லை:—உணர்வுடையது போன்றது.

கஉசச. "கண்ணுங்..............லுற்று"

நு - லை:...தின்னுமென்ப திலக்கணைக்குறிப்பு. கொளவெனத் திரிந்து நின்றது.

கஉசசு. "கலந்துணர்த்துங்.............னெஞ்சு."

நு - லை:—கலந்துணர்த்துங் காதலரைக் கலவிதன்னாலே நீக்க வல்ல காதலரென்றுரைத்துக் கலத்தலாலென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றதென்றார். கலத்தலென்பதுங் கலவி யென்பது மொரு முதனிலைப் பொருட்டொழிற்பெயரின் புடை பெ யர்ச்சி யென்பதறியக் கலத்தலாலென்பதனைக் கலவியாலென்றுரைத் தார். அது "பெரிதாற்றிப் பெட்பக்கலத்த" லென்பதன் கண்ணுங்கா ண்க. ஊடலுணர்தல்புணர்தலைப் புணர்ச்சியென்று ராண்டுங்காண்க. இனிச்செய்யுட்க ணிவ்வாறு நின்று லுரையி லெச்சவாய்பாடாயுரைப் பதுமுண்டு ; அது 'குறப்பாவை' யென்னுங் கோவையாருள், மறப் பான்பிறப்பானென்பத..............

கஉசஎ. "காமம்...........விரண்டு."

நு - லை:—பண்புடையது போன்றது. "சென்றது கொல்போந் ததுகொல் செவ்வியறியுந் துணையு, நின்றது கெனேர்மருங்கிற் கை யூன்றி......முழங்குங் கடாயானை மூரித்தேர்மாறற், குழந்துபின்

சென்றவென்னெஞ்சு” “விசும்புற்றதிங்க”ளென்னுங்கோவையாருள், அசும்புற்ற கண்ணோடலறாய் கிடந்தெென்பவும் உறுப்புடையது போன்றன.

கஉசகூ. “உள்ளத்தார்..............னெஞ்சு.”

ரு - லே:—உறுப்புடையது போன்றது.

(தொடரும்.)

பத்திராதிபர்.

இருவகையுடம்பு.

இருவகையுடம்பாவன பூதவுடம்பு, புகழுடம்பு என்பன. இவற்றுட் பூதவுடம்போ இழிவும், நிலையாமையும் என்றுமுடையது. புகழுடம்போ உயர்வும், நிலைபேறும் என்றுமுடையது.

சூளாமணி.

ஒருவனதிரண்டியாக்கையூன்பயினரம்பின்யாத்த
உருவமும்புகழுமென்றாங்கவற்றினுழ்காத்துவந்து
மருவியவுருவமிங்கேமறைந்துபோமற்றயாக்கை
திருவமர்ந்துலகமேத்தச்சிறந்துபின்னிற்குமன்றே.

செவ்வந்திப்புராணம்.

மின்போலழியும்வயிற்றாமைவடிவாயழியும்மெய்யுருவாய்
முன்போலழியும்பிறந்தழியும்மடவாருடனேமுயங்கியதன்
பின்போயழியுநரைத்தழியும்பேய்போற்றிரிந்துபெயர்ந்தழியும்
பொன்போல்வளர்த்துமிவ்வுடலநிலையாதழிந்துபோய்விடுமே.

பூதவுடம்பானது மண், நீர், தீ, காற்று, வான் என்னும் பூதங்களின் சம்பந்தமாய் வந்து சுகதுக்கங்களை ஆன்மாக்கள் அனுபவித்தற்கு இடமாய்நிற்பது. இவ்வுடம்பிலுள்ள இந்திரியம், தாது, குணம் முதலியனவெல்லாம் பூதசம்பந்தமாகவே விளங்குகின்றன. மெய் மண்ணின்கூறு. வாய் நீரின் கூறு. கண் தீயின் கூறு. மூக்குக் காற்றின் கூறு. செவி வானின் கூறு. அன்றியும் எலும்பு, தசை, நகம் முதலிய கடின பாகங்கள் மண்ணின் சம்பந்தம். இரத்தம், வேர்வு முதலியன நீரின் சம்பந்தம். பசி, தாகம், பார்வை முதலியன

தீயின் குணம். போக்கு, வரவு, தாக்கு முதலியன காற்றின் குணம். ஆசை, செருக்கு, அகங்காரம் முதலியனவானின் குணம்.

புகழுடம்பாவது உயர்ந்தோரால் வியந்துகூறப்படுதலாகிய கீர்த்திவடிவாய் விளங்கும் உடம்பு. இஃது இலகுவிலே பெறற்பாலதன்று. பொருளுடைமை, கல்வியுடைமை, புலமையுடைமை, பேராண்மை, தருக்கின்மை பிறர்வசை பேசாமை, பண்புடைமை முதலிய பலவித உறுப்புக்கள் கொண்டு பலநாள் வருந்திப் பெறற்பாலது. பூதவுடம்பெய்தி நின்ற உயிர்களுக்கெல்லாம் ஊதியமாயுள்ளதும் இதுவேயாம்.

திருக்குறள்.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

இத்துணைச் சிறப்புடைய புகழுடம்பினை வருந்தித் தேடி இவ்வுலகிலே நின்று நிலவ வைத்துவிட்டு அவ்வுலகஞ் சென்றார் அரசரும், அறிஞரும் பிறருமாக அநேகராவர். அவர்களாலே தோன்றிய நூலுரைகளிலும், ஆதுலர்சாலை, வித்தியாசாலை முதலியவைகளிலும் அவ்வுடம்புகள் நின்று வளர்கின்றன. அங்ஙனமே ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்களும் தாம் வருந்தித் தேடிய புகழுடம்பை நிலவ வைத்துச்சென்றனர். இவருடைய புகழுடம்போ பல வழியாலுஞ் சென்று சென்று ஆங்காங்கு நின்று நின்று நிலவுகின்றது. இவராலே தாபிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம், செந்தமிழ்ப்பத்திரிகை, யந்திரசாலை, புத்தகசாலை, வித்தியாசாலை முதலியவைகளை அறியாதவர் யாவர்! இவைகொண்டு தமிழ்நாட்டுக்கு இவராற் செய்யப்பட்ட நன்மைகளை அறியாதவர் யாவர்? இவரால் வெளிப்பட்ட நூலுரைகளை அறியாதவர் யாவர்! இப்பெரு நன்றியாளருடைய பிரிவாலாகுந் துயர் தமிழ்நாட்டிலுள்ள அறிஞர்களை வருத்தாது விடாது. வருத்தினும் இவர்பா லன்புடையார், இவர் பரோபகாரமாகச் செய்துவந்த சங்க காரியங்களைத் தவறாது நடத்திவருதல் பெரு நன்மையாகும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

306

ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

பரலோகமடைந்ததின்மேல்

பாரீஸ் நகரவாசியும், ப்ராசீன பாஷா பண்டிதரும்

(Professor, Langues Orentales)

மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருமாகிய

ஜூலியன் உவின்ஸன் துரையவர்கள் பாடிய

வெண்பா.

உலகாதியந்தம்வணங்குமொப்பில்லாப்
புலவனேநாந்துயரப்போனுய்—பலகாலு
நீயொழியவென்சொல்வோநீயொழியவென்செய்வோ
நீயொழியவென்னிற்போம்யாம். (க)

நுண்சங்குவீசுநுரைத்திரைகண்மேய்ந்தமழை
கண்ணின்மணிபோற்கரியனவாய்—விண்ணி
லெதிரவந்தசெவ்வெயிலோடெங்குமிருளாய்
மதிநிலாமாய்ந்ததென. (உ)

செந்தமிழ்நாட்டெல்லாருஞ்சேர்ந்தேற்றுமாமகனே
தந்தபுகழ்விட்டுத்தவறினேயோ—வந்த
விருவினையும்வென்றுகடந்திலையேயின்னும்
பெருநலஞ்செய்வாய்பிறந்து. (ங)

Prof. JULIEN VINSON.

Paris, March 30, 1912.

சென்னைக் கவர்னராயிருந்து, வங்காளங்கவர்னராக மாற்றப்பெற்ற கார்மைகேற் ப்ரபு அவர்கள்மீது

வாழ்த்துப் பாக்கள்.

சீர்மிகு சென்னையிற் சென்ற ஐம்மதி
பேர்மிகு கவர்னராய்ப் பிறங்கி எம்மனோர்
கார்மயில் எனவுளங் களிக்க ஆட்சிசெய்
கார்மைகேல் ப்ரபுவெனுங் கருணைச் செம்மலே. 1.

முன்னைய வர்கள்ஐங் தாண்டும் மேலுமே
சென்னையிற் கவர்னராய்ச் சேர்ந்தா ரென்னினும்
அன்னையின் ஐம்மதி அன்பின் ஆண்டசீர்
நின்னைமெய்க் கீர்த்தியில் நிகர்வர் யாவரே. 2.

குடிகளின் நன்மையே குறித்து நாளுமோர்
கடிகையும் ஒய்வொழி வின்றிக் கண்ணுறற்
கடைகளும் கணக்கில்கச் சேரி யும்பறைக்
குடில்களும் நோக்கியே குறைகள் நீக்கினய். 3.

வேறு.

பண்டை நாளிலெம் பார்த்திபர் வேற்றுருக்
கொண்டு மன்னுயிர்க் குற்றகு றையெலாம்
கண்டு ணர்ந்தனர் கள்ளனக் கேட்டுளம்
கண்டி லம்உனைக் * காட்டெனக் கண்டனம். 4.

கற்ற எம்மனோர் கட்கெங்க ருத்தினில்
உற்ற பேருத்தி யோக முதவினை
மற்று மன்னவர் மாண்டகு நட்பினைப்
பெற்று வந்தனை பேரரு ளாளநீ 5.

* [காட்டு - உதாரணம்.]

(மன்னவர், அன்னவர் எனவும், வந்தனை, உவந்தனை எனவும ஈரிடத்தும் சிலேஷம்.)

மெய்யன் பன்உயர் வே. கிருஷ்ண சாமியாம்
ஐயன் விண்ணுற அன்னவன் தன்மனைக்
கெய்திப் போந்ததும் ஏனைய வும்முறை
செய்தல் சாலுமோ செம்மனத் தண்ணலே. 6.

வேறு.

மன்னவர் இயலெல்லாம் வாய்க்கப் பெற்றநம்
மன்னவர் ஜார்ஜிவண் வந்து சொல்லிய
நன்னய வுரைநிலை நாட்ட நல்வழி
நின்னையே போல்பவர் நியமனம் மிதே. 7.

வேறு.

இன்னநின் குணங்க ளாக இனியுன்றன் பெருமைக் கேற்ப
மன்னிய மனையாள் மக்கள் மயிலையில் மயிலன் னூர்க்குத்
துன்னுதல் சரிகைவேலை தொடக்கத்த தொழில்ப யிற்றிப்
பன்னரும் பரிவால் அன்னூர் உளத்தினைப் பறித்துக்கொண்டார். 8.

வேறு.

இன்ன சிறப்பெல் லாம்வாய்ந்த ஏந்தால் உன்னைப் பிரிவதனுற், சென்னையு ளேம்பாம் திகைப்புற்றுச் செயலற் றிருக்கின் றேமெனினும், மன்னன் பணியென் றும்மெங்கள் வங்கா ளத்தார் வாழ்வென் றும், உன்னில் உனக்கும் உயர்வென்றும் உணர்ந்தே உள்ளந் தேர்ந் தேமால். 9.

வேறு.

வாழி லார்ட் கார்மைகேல் வாழி உனதுபுகழ்
வாழியுன் றன்மனைவி மக்களும்—வாழி
தலைவனென நீயின்று சார்வங்கம் வாழி
உலைவில்சீர் மன்ஜார்ஜ் உயர்ந்து. 10.

வே. முத்துசாமி ஐயன், பீ-ஏ.எல்-டி.
அரங்கநாதபுரம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

1912-ஸ்ரீ மார்ச்சுமீ 1உ முதல் 31உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
விரோதகிருது ஸு மாசிமீ த்திற்குகாணுகொத்தான் மகா-ள-ள-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களிடமிருந்து மாதச்சந்தா வரவு	50	0	0	சங்கச் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ...	254	9	2
				கலாசாலை மாணவர்களுக்கு ஆகாராதி போஷணைக்காகச் செல்லாக்கியது ...	55	13	4
1912ம்ஸு மார்ச்சுமீ க்குரிய புதுக்கோட்டை சமஸ்தானம் மாதச்சந்தா வரவு ...	50	0	0	கலாசாலை உபயோகத்துக்கு வாங்கியபுத்தகம்...	6	0	6
				பைண்டிங் ஆபீஸ் ரயில்வே சார்ஜ் 0— 4—0			
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	435	15	0				
				ஷை கண்டின்ஜன்சிச் செலவு 17— 5—5			
பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவகையில் வரவு ... 308—13—6				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	17	9	5
சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 59— 7—9				பிரிண்டிங் ஆபீசு உபயோகத்துக்கு வாங்கிய டைப்ஸ் ... 5— 6—0			
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	368	5	3	ஷை ஆபீசுஸ்டேஷனரிச்செலவு 74—9—0			

பைண்டிங் ஆபீசு வரவு ...	58— 1—6			
சங்கம்ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு ...	34— 3—0			
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...		92	4	6
புத்தக விற்பனை வரவு ...		103	12	0
உத்தப்பநாயக்கனூர் ஜமீந்தார் மகா-ா-ா-ஸ்ரீ முத்துகிருஷ்ணசாமி உத்தப்பநாயக்கரவர்களிடமிருந்து Life Member Ship க்காக பாதிக்கட்டணம் வரவு	50— 0—0			
சங்கம்காலிநிலம் மாக்கடை வாடகை நாள துவிரோதிகிருது ஹு மாசி மீ த்துக்கு வரவு ...	35— 0—0			
விளம்பர வகையிற் சார்ஜ் வரவு (Advertisement Charges)	20— 0—0			
ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை கட்டணம்வரவு ...	45— 2—0			
கத்தி சாணை பிடித்த வகையில் வரவு ...	2— 8—0			
பழய News paper விற்ற வகையில் வரவு	6— 9—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ		159	3	0

ஷை ஆபீஸ் சம்மந்தமான ரயில்வே சார்ஜ் ...	2— 0—0			
ஷை ஆபீசு ஆயில்என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு	12—11—6			
ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு	27—11—5			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		122	5	11
போஸ்டேஜ் வகையிற் செலவு ...		17	8	0
ரிபேர்வகையிற் செலவு ...		13	8	0
பிரிண்டிங் ஆபீஸ் உபயோகமாக ஸ்டாக்செலவு		0	10	0
லைபிரேரி உபயோகத்துக்கு வாங்கிய புத்தகம்		0	12	0
1911 ஹு ஏப்ரில்மீ முதல் 1912 ஹு மார்ச்சுமீ முடிய ஹு 1க்கு ப்ரீவி வரி செலுத்தியது	7—14—0			
சென்ற பிப்பிரவரி நாளது மார்ச்சு ஆக 2 மாதங்களுக்கு சங்கம் ஆபீசு இருக்கிற கட்டிடத்துக்கு வாடகைசெலுத்தியது	50— 1—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		57	15	0

310

311

				கலாசாலை உபயோகத்துக்கு கரோசன் ஆயில் வாங்கியது	1—13—0			
				ஆபீஸ் ஸ்டேஷனரி கண்டின்ஜன்சி செலவு ...	10—12—3			
				ரசீதுலேபிள் வண்டிவாடகை வகையரா செலவு ...	1—4—0			
				சங்கம் காலிநிலத்தை வாடகைக்கு ஒப்புக்கொள்வதாய் அட்வான்ஸ் வெள்ளையநாடாரிடமிருந்து வந்ததை வாபஸ் கொடுத்தது	40—0—0			
				பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீஸ் அச்சுக்கூலிக்குச் செல்	59—7—9			
				ஷை ஆபீசு பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் கூலிக்குச் செல்	34—3—0			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		147	8	0
ஆக மொத்தம் ரூ	1259	7	9					
				ஆக மொத்தம் செலவு ..		694	3	4
சென்றபிப்பிரவரிமீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	438	3	3	போக பாக்கியிருப்பு ...		1003	7	8
ஆக மொத்தம் வரவு ...	1697	11	0	ஆக மொத்தம் ...		1697	11	0
ஆக மொத்தம் ரூ ...	1697	11	0	ஆக மொத்தம் ...		1697	11	0

T. A. Subbuvenkatarama Iyer,
Manager.
22—4—12.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
2—5—12. *Auditor.*

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

4. **லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:**—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இவைகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்தசாப்பாட்டையும் உடனே ஜீரணஞ்செய்வதுடன், வாயில் அநேக மணிநேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதி தினம் காலையில் 2 மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினிமாந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தாலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்டநாடாது; ஜன்னியிற்கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அநேக விலைப்பெற்ற மருந்து சாமான்களும், வாசனைத்திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக்கர்ப்பூரம் முதலிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியதனாவசியம். அறைக்குழந்தை முதல் வயதுசென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1-முதல் 4-மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1-முதல் 12-சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால் சார்ஜ் அணா 5-ம், சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

7. **நேத்திரபிந்து:**—கண்ணோய், கண்குற்றல், கூசல், நீர்வடிதல், மங்கல் அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம்வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை, புருவம் இவைகளில் வலி, கண்புகைச்சல் இவைகளைக்குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலைசெய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியது அனாவசியம். சீசா 1-க்குவிலை அணா 8, வி.பி. செலவு 1-முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5-பிரத்தியேகம்.

8. **கர்னபிந்து:**—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளைக் குணமாக்கும். செவி நன்ருய்க் கேட்கும், சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5-பிரத்தியேகம.

முக்கிய கவனிப்பு:—என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும், எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன், பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம். [2]

ஏஜண்டுகள் தேவை. **ஏஜண்டுகள் தேவை.**

கேசர் பவுடர்.

அணியுங்கள். மனங்களியுங்கள்.

ஐயன்மீர்

இதுகாறும் நம்மவர்கள் வெளியூர்களிலிருந்து வரும் (செண்டு) அத்தர்களை வாங்கி யுபயோகித்து வந்தனர். இனி, அவ்வளவு

சிரமமும் செலவும் வேண்டியதில்லை. நமது பவுடரை யாம் பிரதிதினமும் பூசிக் கொள்ளும் சந்தனத்துடன் கலந்து உபயோகிக்கின் இந்திரனணியுங் கந்தமோ வென்று யாவரும் மயங்க உள்ளக்களிப்பும் உவகையும் செய்து தெள்ளிதில் வாசனை செய்திடும். இது 64 வகை அற்புத மூலிகைகளும் நயமான புனுகு,சவ்வாது, கஸ்தூரி,குங்குமப்பூ,பச்சைக்கற்பூர முதலிய வாசனைத்திரவியங்கள்சேர்த்து நம்மவர்க்கென்றே பாகமாகச் செய்திருக்கிறது. இப்பவுடரை எள்ளளவு எடுத்து உயர்ந்தவேஷ்டிகள் சேலைகள் முதலியவற்றின் நடுவில் வைத்தால் வெளியூர்களிலிருந்துவருப் (பிட்டல்டஸ்டு)முதலிய வாசனைத்திரவியங்களைக் காட்டிலும் வாசனையாயிருக்கும். யான் கூறுவதாற் பயனில்லை. தாங்கள் ஒருமுறை வாங்கி யனுபவித்தால் தங்கள் மித்திரர்கட்கு இதன் பெருமை முதலியவற்றைத் தாங்களே கூறுவீர்கள்.

எங்கள் ஏஜண்டுகள் (S I. Ry.) ரயில்வேக் கம்பெனியுள்ள இடங்கட்கெல்லாஞ் சென்று வருவதால் மற்றைய வியாபாரிகள் தங்கள் கம்பெனியில் உள்ள கிரயச்சாப்தா முதலிய நோட்டீஸ்களை 1000-க்கு ரூ. 1—0—0 வீதம் எங்கட்கனுப்பினால் ஏஜண்டுகள் எங்கள் நோட்டீசுகளோடு வெளிப்படுத்தி வருவார்கள்.

விலை,	தோலா	1	½	¼
	ரூ	1—0—0,	0—9—0,	0—5—0.

தங்கம்,வெள்ளி,மெடல்களும் சர்ட்டிபிகேட்டுகளும்பெற்ற

பசலா கம்பெனி,

220/ சைனாபஜார் ரோட், (லா காலேஜுக்கு எதிரில்),
எஸ்பிளனேட், மதராஸ்.

கொ ேகா ணு ச ன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

கைகண்ட மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

கோேணுசன் சீக்கிரம் எரிச்சலுண்டாவதையும் கோரே நிமிர்ச்சியையும் தணிக்கிறது. இது தான் மிகவும் மேலான மருந்து. இது இரைக்குடரைத் தொந்தரவுசெய்யாமலும், அருவருப்பையும் வாந்தியையும் உண்டாக்க மாட்டாதுந் தவிர குண்டிக்காய்க்குறியில் எரிச்சலு முண்டுபேண்ணுது. அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. 15-மணி நேரங்களில் சௌஸ்தமாகிறது.

HOLY MULLER & SCHMIDT,

7, Colootola Street,

CALCUTTA.

Stocked by:—

T. V. GEORGE & CO.,

CHEMISTS,

MADURA.

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுதவேண்டுகிறேன்.

No. 3.

CHILDREN IN INDIA.

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

SCOTT's EMULSION

contains the proper bone and tissue builder for children.

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING CHEMISTS

LONDON, ENGLAND.

(No. 1.)

CHAMBERLAIN'SPAINBALM

உடம்பில் நோய்க்குச் சேம்பர்லேன் துரை

செய்திருக்கு தைலம்.

முதுகுபிடிப்பு, பக்கசூலை, கைகால்

ஒய்ச்சல், தலைநோய், காயங்கள்,

இவைகளைத் தீர்க்கும்.

கீல்வாயுவையும், தீர்க்கும், தீர்க்கும், தீர்க்கும்.

கீல்வாய்வு என்றால் என்ன?

கீலுக்குக்கீல் வீக்கமும் வேதனையும், குத்தலும் குடைச்சலும் இழுப்பும் வலிப்பும். உட்காரமுடியாது, உறங்கமுடியாது.

இப்படியெல்லாம் இருந்தால், கீல்வாயுவுதான் என்று கொள்ளும்; தப்ப, சேம்பர்லேன் தைலத்தை வாங்கிக்கொள்ளும்.

நோவும் வீக்கமுமிருக்குமிடத்தில் தைலத்தைத் தேய்த்தவுடனே உள் எலும்புவரைக்கும் மருந்திறங்குவதை உணர்வீர். உடனே வேதனை குறையும். தைலத்தைத் தேய்த்துவர நாளடைவில் நோய் அடியோடு நீங்கும்.

இது முழுவதும் மூலிகை. கைபடாமல் செய்தது.

எங்கும் விற்பது, எளிதில் கிடைப்பது.

சின்னபுட்டிரூபா. 1. —— பெரிய புட்டி ரூபா. 2.